


நீர்வேலி நலன்புரி சங்கம் - கனடா
NEERVELY WELFARE ASSOCIATION - CANADA
ESTD 1999
2009
வாழையடி
வாழை



Cell: 416.720.0234 | Tel: 905-201-9977
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/FUTURE
REALTY INC.,BROKERAGE*
*Independently Owned and Operated.
Akilan Sivapalan
Sales Representative
MLS
MULTIPLE LISTING SERVICE®
REALTOR®
Higher Standards AgentsHigher Results!
HomeLife/Future Realty Inc.
Unit 205 -7 Eastvale Dr ,Markham Ontario L3S4N8
akilan47@gmail.com | www.homelifeakilan.com

# NEERVELY WELFARE ASSOCIATION - CANADA
# நீர்வேலி நலன்புரி சங்கம் - கனடா
## வருடாந்த வெளியீடு மலர் 3
## ANNUAL PUBLICATION ISSUE 3

## The Board of Directors 2009/2010

**President:**
Mr. G.. Jeeva Gopalasingam
**Vice President:**
Mr. S. Senthilnathan

**Secretary:**
Mr. P. Jegan
**Asst.Secretary:**
Mr. T. Srinathan

**Treasurer:**
Mr. N. Gnanendran
**Asst. Treasurer:**
Mr. P. Punchanathan

**Directors:**
Mr. S. Palanipillai
Mr. S. Piraisoody
Mr. P. Panchalingam
Mr. A. Sritharan
Mr. V. Balachandran
Ms. J. Nirmaladevy
Mr. R. Kiriharan

**Auditor:**
Mr. S. Sivalingam

**Editors:**
Mr.K. Anpalagan

**Trustees:**
Mr. P. Pathmanathan
Mr. S. Balasingam
Mr. K. Sivathasan

**Contacts:**
kannan1@engineer.com
editor@neervely.ca

**Mailing Address:**
Neervely Welfare Association - Canada
1411 - 234 Albion Road,
Etobicoke, Ontario, M9W 6A5Canada
www.neervely.ca

## உங்களுடன்....

வாழையடி வாழை என்னும் இந்த மலர் எமது சங்கத்தின் மூன்றாவது வெளியீடாக மலர்கிறது. இதில் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், வாழ்த்துச் செய்திகள் என்பன பதிவாகி உள்ளன. இந்த மலர் சிறப்பாக அமைய ஆக்கங்களை வழங்கிய,

நீர்வை பொன்னையன்,
திரு. த. சிவபாலு (M.A),
கலாநிதி விபுலானந்த அடிகள்,
பேராசிரியர். சி. சிவசேகரம்,
திரு. எஸ்.கே. பாலேஸ்,
இந்திரா பிரபாகரன் (B.A),

மற்றும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், ஏனைய அன்பர்களுக்கும், விளம்பரங்கள் வழங்கிய வர்த்தகப் பெருமக்களுக்கும் எமது சங்கம் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் நாங்கள் எல்லோரும் எமது எதிர்கால வளர்ச்சி குறித்துத் திட்டமிட்டு பல கருமங்களை ஆற்ற வேண்டிய சூழலில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். முதலாவதாக பொருளாதார அபிவிருத்தி முக்கியமான சவாலாக எமக்கு அமைந்துள்ளது. ஒரு அந்நிய நாட்டில் எங்கள் காலடிகளைப் பதித்து அரசியல் பொருளாதார கலாச்சார துறைகளில் நாம் எம்மை ஈடுபடுத்தி, தொழில்துறையில் முன்னோடிகளாக வர வேண்டும். இரண்டாவதாக எங்கள் இளம் சந்ததியினருக்கு சிறந்த கல்வியைப் பெற்றுக் கொள்ள எம்மால் இயன்றவற்றை எல்லாம் செய்து கொடுக்க வேண்டும்.

எமக்கு இன்னுமொரு முக்கிய கடமை ஒன்று உள்ளது. எமது தாய்நாட்டில் உள்ள எமது உறவுகளுக்கு பொருளாதார, கல்வி அபிவிருத்திக்கு எம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும். பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்துள்ள நாட்டில் வாழும் நாங்கள் புதிய தொழில்நுட்பம், தொழில்சார் கல்வி, நவீன சுகாதாரத்துறை போன்றவற்றை எமது தாய் நாட்டுக்கு எடுத்துச் செல்ல ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

**நாம் எல்லோரும் ஒன்றுபட்டு சொல்வதைச் செயலில் காட்ட முன்வரவேண்டும்!**

**- ஆசிரியர் -**

# வாழையடி வாழை - 2009

## உள்ளீடு - Quick Index

| | |
|---|---|
| முன்னுரை | 01 |
| சங்க கீதம் | 03 |
| வாழ்த்துச் செய்தி - கனேடிய பிரதமர் - Hon. Stephen Harper, PC., MP | 05 |
| வாழ்த்துச் செய்தி - Markham நகரசபை உறுப்பினர் - திரு லோகன் கணபதி | 07 |
| தலைவரிடமிருந்து... - திரு. ஜீவா கோபாலசிங்கம் | 09 |
| செயலாளரிடமிருந்து... - திரு. ஜெகன் பசுபதி | 11 |
| வாழ்த்துச் செய்தி - நீர்வேலி நலன்புரிச்சங்கம் - கனடா - நீர்வேலிக்கிளை | 13 |
| வாழ்த்துச் செய்தி - திரு. இரா குணநாதன், அதிபர், அத்தியார் இந்துக்கல்லூரி | 15 |
| வாழ்த்துச் செய்தி - அத்தியார் பழையமாணவர் சங்கம் - இலண்டன் கிளை | 17 |
| வாழ்த்துச் செய்தி - நீர்வேலி நற்பணிச் சங்கம் - சுவிஸ் | 19 |
| செயற்குழு - 2009 | 21 |
| வாழையடி வாழை நிகழ்ச்சி நிரல் - 2009 | 23 |
| காலவெள்ளம் - நீர்வை பொன்னையன் | 25 |
| பரீட்சை முடிவுகள் | 35 |
| சைவநீதியும் தமிழ் இனமும் - புலோலியூர் கலாநிதி விபுலானந்த அடிகள் | 37 |
| Peace of Mind - Mr. P. Pathmathan | 39 |
| சமுதாயமும் இனவாதமும் - ஆய்வுக்கட்டுரை - திரு. த. சிவபாலு எம்.ஏ | 41 |
| வாழையடி வாழை 2008 - படங்கள் | 49 |
| நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் - இந்திரா பிரபாகரன் | 52 |
| உன்னதமான படைப்பாளி கவிஞர் கலாநிதி இ. முருகையன் - பேராசிரியர் சி. சிவசேகரம் | 54 |
| ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - திரு. ந. ஞானேந்திரன் | 57 |
| திருமணங்கள் முறிவடைவது ஏன் - த. தங்கபாலு எம்.ஏ | 59 |
| Unity Brings Success - Mr. P. Pathmanathan | 63 |
| உங்கள் வீட்டின் விலையை தக்க வைக்க - எஸ்.கே. பாலேஸ் | 64 |
| நன்றிகள் பல | 80 |

---

## OUR MISSION STATEMENT

We plan, direct and carry out Social, Cultural, Educational activities both in Canada and Neervely. Also create job opportunities for members & family members through Associations Network and information sharing with an aim to integrate quickly & effectively with the Canadian society.

# நீர்வேலி நலன்புரி சங்கம் - கனடா
# சங்க கீதம்

வாழிய எம் ஊர் நீர்வேலி
நலன் புரி சங்கம் வாழியவே
ஆழ்கடல் போல் நின் அறிவுடமை
நல்லால் மரம் போல் வாழியவே! (வாழிய...)

நீர்வைக் கந்தன் துணையுடனே
நீர்வேலி மண் என்றும் வாழியவே
அரசகேசரிப்பிள்ளையார் அவர் அருளுடன்
என்றும் என்றும் வாழியவே
வாய்க்கால் தரவைப் பிள்ளையார் தரும்
வரமும் பெற்றே வாழியவே! (வாழிய...)

நல்லூர்கள் சூழ்ந்த பொன் நாற்திசைகள்
நல்லோர்கள் போற்றிட வாழியவே
சிறுப்பிட்டியோடங்கு கைதடியூர்
வடகிழக்குடன் வளமாய் வாழியவே! (வாழிய...)

முக்கனி மரங்களில் வாழையினம் - நீர்
வேலி மண் தந்திடும் அடையாளம்
கோப்பாய் அதனொடு அச்செழுவாம்
தென்மேற்குடன் இணைந்தே வாழியவே! (வாழிய...)

அத்தியார் இந்துக்கல்லூரி அமைத்தார்
அருணாசலப் பெரியார்
சத்தியம், தர்மம் தாங்கி நம்மூர்
தரத்தில் உயர்ந்திட வழிகள் செய்தார்
ஞாலமதில் தாய் நம்மொழியாம் தமிழ்
வளர்த்தார் ஞான பண்டிதராம்
சங்கம் வளர்த்த சங்கரனார் - தமிழ்
பாண்டித்தியத்தில் பண்டிதராம்
எல்லாப் புகழுடன் நீர்வேலி
என்றும் போற்றிட வாழியவே! (வாழிய...)

தாய் மண்மீது பாசமுடன்
மண் பற்றும் நிறைந்த நீர்வேலி
நின்னினத்தில் வானுயர் அன்பு வைத்தே
வாழிய வாழிய வாழியவே! (வாழிய...)

செய்தொழில் திறனுடன் பெருமுயற்சி
காமாட்சி அம்பாள் தொழிலகத்தின் உயர்ச்சி
சித்திரத்தேர்கள் அமைப்பதிலே
சிறந்து விளங்கிய நீர்வேலி
மரத்தொழிலோடு மின் பிறப்பாக்கி
பிற ஊர்களில் எங்கும் ஒளியேற்றி
எதிலும் முதலாய் நீர்வேலி
என்றும் புகழுடன் வாழியவே! (வாழிய...)

செல்வம் செழிக்கும் எம்மூரே
சிறப்புடன் வாழிய வாழியவே!
வாழிய வாழிய வாழியவே!
வாழிய எம்மூர் வாழியவே!

ஆக்கம்
-கவிஞர் அமல்குமார் சின்னத்தம்பி-

# Crib, formula, diapers, education savings plan



## The Global Educational Trust Plan Offers You Options and Advantages

- Eligibility for government grants
- Low-risk investments
- Choice of colleges or universities worldwide
- A professionally managed investment portfolio
- Pooled investing for potentially higher returns
- Many flexible plan options that make saving easier



**To learn more about the Global Plan call**

**Jeeva Gopalasingam Scholarship Plan Representative**

**(416) 258-8289 or (416) 741-7377**

GLOBAL

EDUCATIONAL MARKETING CORPORATION
distributor of the
GLOBAL EDUCATIONAL TRUST PLAN
*Offered by prospectus only*

***The investment they won't out-grow***

PRIME MINISTER . PREMIER MINISTRE

*I am pleased to extend my warmest greetings to the members of the Neervely Welfare Association - Canada.*

*This event provides a wonderful opportunity to reflect upon the important role your members play in the community, particularly in your efforts to assist newcomers to Canada. Tonight, as you gather with friends and family to celebrate your culture and the new year, you may take great satisfaction in your many contributions to the strength and vitality of our nation.*

*On behalf of the Government of Canada, please accept my best wishes for an enjoyable evening, and for a joyful and prosperous year ahead.*





*The Rt. Hon. Stephen Harper, P.C., M.P.*

*OTTAWA*
*2009*

# Canadian Home Appraisals Inc

CHAI CANADIAN HOME APPRAISALS INC.

**S.K.Bales,** CRA, CAR, MVA , FRI, CRES
**Managing Director**
**Tel: 905-201-0929**
**Fax: 905-201-8482**
**Web: www.chainc.ca**
**Email: chai@chainc.ca**

Century 21 Affiliate Realty Inc.

Phone: 416-290-1200

## வீடு வாங்க, விற்க, வீட்டின் பெறுமதியை சட்டபூர்வமாக மதிப்பிட்டு (Appraisal) அறிக்கையை பெற்றுக்கொள்ள தாமதிக்காது உடனே அழையுங்கள்

### *MY PROFESSIONAL DESIGNATIONS*

**CRA, (Canadian Residential Appraiser)**
Designation with the Appraisal Institute of Canada

**CAR: (Certified Appraisal Reviewer)**
Designation with Canadian National Association of Real Estate Appraisers

**MVA (Market Value Appraiser-Residential)**
Designation with The Canadian Real Estate Association

**FRI (Fellow of the Real Estate Institute)**
Designation with Real Estate Institute of Canada

**CRES (Certified Real Estate Specialist)**
Designation with Real Estate Institute of Canada

**REAL ESTATE BROKER:**
Real Estate broker licence with Real Estate Council of Ontario.

முக்கிய குறிப்பு: Consumer Proposal ற்கு தேவையான வீட்டின் பெறுமதி கடிதத்தை (Letter of market value opinion) சிலமணிநேரத்தில் மிகக்குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளலாம்

**S.K.Bales,** CRA, CAR, MVA, FRI, CRES
**Real Estate Broker**
**Cell: 416-801-3219**



MARKHAM

**Logan Kanapathi**
*Councillor – Ward 7*

October 28, 2009

## Message from Logan Kanapathi, Councillor, Ward 7

Dear friends,

I would like to express my sincere congratulations and support to the Neervely Welfare Association – Canada, for their dedication to planning, organization and coordination of cultural, social and recreational activities which promote and assist your members and their families to integrate and adapt to Canadian life.

I am quite sure that your contribution to the community is very much appreciated by all who are in need of your services and assistance, and I commend you on your commitment to this invaluable support.

I am quit sure that your Cultural Events & New Year Dinner on Saturday, December 5, 2009, at the Everest Banquet Hall would be a resounding success.

Warmest regards,



Logan Kanapathi
Councillor, Ward 7
Town of Markham

**The Corporation of the Town of Markham** • 101 Town Centre Boulevard, Markham, Ontario L3R 9W3
905-479-7748 • Fax: 905-479-7763 • email: lkanapathi@markham.ca • Website: www.markham.ca


Canx Marketing Inc.
489 Brimley Road, Scarborough, On M1J 1A3
Cell: 647-400-4749 Business: 416-269-4749
E-mail: canxlingam@yahoo.com
JAFFNA BRAND
திருமகள்
BRAND
Best Wishes from Canx Marketing Inc
எங்கள் நாட்டின் சுவையை
உங்கள் வீட்டிலும் சுவைக்க
JAFFNA BRAND
மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
CANX MARKETING INC
Kannan 416 893 9342

# நீர்வேலி நலன்புரி சங்கம் - கனடா
# NEERVELY WELFARE ASSOCIATION - CANADA
## தலைவரிடமிருந்து....

என் அன்பார்ந்த உறவுகளே,

எமது நீர்வேலி நலன்புரிச் சங்கம் - கனடா தனது பதினோராவது அகவையைக் கடந்த நிலையில், ஐந்தாவது இராப்போசனத்துடன் கூடிய கலை இரவாம் வாழையடி வாழை நிகழ்வைக் கொண்டாடுகின்ற இவ்வினிய மாலைவேளையில், மூன்றாவது வாழையடி வாழை மலரை வெளியிடுகின்ற இந் நன்னாளில் இந்நடப்பு ஆண்டின் தலைவரென்ற பெருமிதத்துடன் உங்கள் அனைவரையும் இம்மலரினூடு சந்திப்பதில் பேருவகையடைகின்றேன். எமது சங்கம் எம் ஊரிலிருந்து புலம் பெயர்ந்து கனடாவிலே வாழ்கின்ற மக்களையும், எம் நீர்வேலியின் பால் அக்கறை கொண்ட நலன்விரும்பிகளையும் அங்கத்தவர்களாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்ததே.

எமது சங்கம் இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் முதல் சங்கத்தின் செயற்பாடுகளையும், அறிவித்தல்களையும், நீர்வேலியின் செய்திகளையும் உங்களுக்கு உடனுக்குடன் அறியத்தரும் முகமாக www.neervely.ca என்ற இணையத்தளத்தை வடிவமைத்து இயக்கி வருகின்றது. இன்னும் கட்டமைப்பு வேலைகள் முழுமையாக முற்றுப் பெறவில்லையாகிலும், மிக விரைவில் அனைத்தும் தயாராகி நீங்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்படும் என்பதை உறுதியாகக் கூறி வைக்க விரும்புகின்றேன்.

மேலும் எமது சங்கம் கனடாவிலும் எம்மூரிலும் இளம்சந்ததியினராம் மாணவர் சமுதாயத்தின் உள, உடல் விருத்தியினை மேம்படுத்தும் பொருட்டு பல உதவிகளையும், சேவைகளையும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் கனடா ரொரன்ரோவில் வருடாந்த வசந்தகால ஒன்று கூடலில் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றது. அடுத்த வருடம் முதல் எமது சங்கத்திற்கென உதைபந்தாட்ட அணிகளையும், கூடைப்பந்தாட்ட அணிகளையும் ஆரம்பிக்கும் முன்முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளோம்.

இதைவிட இங்குள்ள பெற்றோர்களையும், மாணவர்களையும் சங்கத்தின் பால் ஈர்க்கும் பொருட்டும், ஊக்குவிக்கும் பொருட்டும் சென்ற வருடத்திலிருந்து போட்டிப்பரீட்சைகளையும் நடாத்தி வருகின்றோம். எம்மூரைப் பொறுத்தவரை நாம் மாணவர் சமுதாயத்தின் முன்னேற்றம் கருதி அங்குள்ள பாடசாலைகளுக்கு பலவித உதவிகளையும் சேவைகளையும் சங்கத்தின் ஆரம்ப காலம் முதல் செய்து வருகின்றோம். இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல் எமது சங்கத்தின் நீண்ட கால கனவாம். "புலமைப்பரிசில்" திட்டமொன்றையும் அடுத்த கல்வியாண்டிலிருந்து ஆரம்பித்து நடை முறைப்படுத்துவதற்கு எம் நிர்வாகம் திடசங்கற்பம் பூண்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கான முழுமுயற்சிகளிலும் எமது சங்கத்தின் நீர்வேலிக்கிளையினரும், அங்குள்ள பாடசாலை அதிபர்களும் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்த விரும்புகின்றேன். இவை மாத்திரமல்ல, இன்னும் பல வேண்டுகோள்கள் பலதரப்பினரிடமிருந்தும் விடுக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றையும், தேவையறிந்து, தரமறிந்து பரிசீலித்து நிறைவேற்றி வைக்கின்ற பொறுப்பும், கடமையும் எம்முன் இருக்கவே செய்கின்றன. அவர்களின் தேவைகள் கருதி எமது சேவைகளையும் விஸ்தரிக்கவே விரும்புகின்றோம்.

எனவே எல்லோரும் ஒற்றுமையாகவும், உறுதியாகவும் செயற்பட்டு எமது சங்கத்தை முன்னேற்றுவதன் மூலம் எம்ஊரை முன்னேற்ற முன்வாருங்கள் என அன்புடன் அழைக்கின்றேன்.



நன்றி!

ஜீவா கோபாலசிங்கம்
தலைவர்
நீர்வேலி நலன்புரி சங்கம் - கனடா


Elegance
Elegance Banquet Services helps make your dream occasion a reality.
Wedding * Puberty Ceremony * Birthday Party *
Engagement * Formals *
ELEGANCE
banquet services
Pragash (JP)
Thushan
Tel: 647 203 6169
Tel: 289 242 9688
e-mail: elegancebanquet@gmail.com

# நீர்வேலி நலன்புரி சங்கம் - கனடா
# NEERVELY WELFARE ASSOCIATION - CANADA
## செயலாளரிடமிருந்து....

இயற்கையிலே நீர் வளத்தையும், குறிப்பாக வாழை, தென்னை, பனை போன்ற முக்கிய பயன் தரும் மரங்களையும், தானிய பயிர்ச்செய்கைக்கு உகந்த செம்மண்ணையும், தமிழ் கலாச்சாரப் பண்பாட்டை பின்பற்றும் மக்களையும், பல பெருமை வாய்ந்த கோயில்கள், தொழிற்சாலைகள் மற்றும் பல விதமான கலாச்சார மண்டபங்களையும் கொண்டு அமைந்திருக்கும் கிராமம் நீர்வேலி ஆகும்.

அங்கிருந்து வந்த பெரும்பாலான மக்களால் ஆரம்பிக்கப்பட்ட எமது சங்கம் இன்று படிப்படியாக உங்கள் ஆதரவுடன் ஒரு சகாப்தத்தை வெற்றியுடன் கடந்து இவ்வாண்டின் குளிர்கால ஒன்றுகூடலில் எமது வாழையடி வாழை மலர் மீண்டும் உங்கள் கைகளில் தவழ்கின்றது.

எமது சங்கத்தின் முக்கிய நோக்கம் நீர்வேலி, கனடா மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் இளம் சமுதாயத்தை, கல்வி, கலாச்சார, தொழில் மற்றும் எமது மரபுக் கலைகளில் ஊக்குவிப்பதும், உலகெங்கும் வாழும் நீர்வேலி மக்களை ஒன்றிணைப்பதுமாகும். இதற்காக நீர்வேலியில் உள்ள பாடசாலை பிள்ளைகளின் பரிசளிப்பு விழாவிற்கும், விளையாட்டுப் போட்டிகளுக்கும் பொருளாதாரப் பங்களிப்பை வழங்கி வருகின்றது. அத்துடன் புலமைப் பரிசில் திட்டங்களை வேகமாக செயற்படுத்துவதற்காக இளைப்பாறிய ஆசிரியர்களைக் கொண்ட செயற்குழு ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

கனடாவில் உள்ள சிறார்களுக்கு தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலப் பரீட்சைகளை மூன்றாவது முறையாக மிகவும் சிறப்பாக நடத்தியுள்ளது. மேலும் விளையாட்டு மற்றும் கலை ஆகியவற்றுக்காக இரு தனிப்பட்ட செயற்குழுக்களை ஆரம்பிப்பதற்காக, அப்பணிகளில் அனுபவம் உள்ள தொண்டர்களை நிர்வாக சபையினர் பரிந்துரைத்துள்ளார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் பெற்றோர்களுக்கு எனது தாழ்மையான வேண்டுகோள், உங்கள் கண்மணி-களை விளையாட்டு, மரபுக் கலைகளில் ஆர்வம் ஊட்டி, அவைகளில் பங்குபற்றுவதற்கு அழைத்து வாருங்கள். இந்த விழா நிகழ்ச்சிகளின் நோக்கம் எமது சமுதாயத்தில் மறைந்திருக்கும் கலைஞர்களின் திறமைகளை ஊக்குவித்து, அவர்களுக்கு நம் மேடையில் சந்தர்ப்பம் அளிப்பதுடன், அவ் இளம் சிறார்களின் பெற்றோர்களை ஆனந்தக் கண்ணீரில் மூழ்க வைப்பதுமாகும். மேலும் இன்றைய விஞ்ஞான உலகில் வேறுபட்ட கண்டங்களில் வாழ்பவர்களுடன் அருகில் இருப்பவர்களைப் போல் தொடர்பு கொள்ளக் கூடிய வசதி கொண்ட நாம் கனடாவில் மட்டுமல்லாது பல நாடுகளில் உள்ள நீர்வேலி மக்களுடன் இணைந்து நீர்வேலி மண்ணுக்கும், மக்களுக்கும் நற்பணியாற்றுவோமானால் நீர்வேலியின் வளர்ச்சியில் எந்தவித ஐயமும் இல்லை.

இம்மலர் மலர்வதற்கும், நீர்வேலியின் வளர்ச்சிக்கும் ஆதரவு அளித்த மற்றும் ஆதரவு அளித்துக் கொண்டிருக்கும் ஆதரவாளர்களையும், வர்த்தக பெருமக்களையும் நீர்வேலி மக்கள் சார்பில் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களின் இனிய பணிகளுக்காக அவர்கள் என்றென்றும் பாராட்டப்படுவார்கள். மேலும் இம்மலர் இடைவிடாது பல்லாண்டு காலங்கள் மலர்வதற்கு உங்கள் அனைவரது ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்றும் உரியர் பிறர்க்கு!




என்ற திருவள்ளுவரின் திருக்குறளை ஞாபகப்படுத்திக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பினை அளித்த நீர்வேலி மக்களுக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

வாழையடி வாழை மலர் உலகெங்கும் மணம் வீசட்டும்!

வணக்கம்!

ஜெகன் பசுபதி
செயலாளர்
நீர்வேலி நலன்புரி சங்கம் - கனடா




**உங்களுக்கென்றொரு வாழ்விடம் அமைத்திட முதலில்
நம்பிக்கையான நட்பான நாணயமான ஒரு முகவர் வேண்டும்.**

**விரும்பிய இடத்தில், உங்கள் வருமானத்திற்கேற்ப, நியாயமான
விலையில் வீடு, மற்றும் வியாபார நிலையம் வாங்கவும்,
உங்கள் வீட்டை குறுகிய காலத்தில் நியாயமான விலையில்
விற்கவும், மற்றும் RESP தேவைகளுக்கும்
இன்றே அழையுங்கள்.**

# Siva Sangarappillai

HOMELIFE/FUTURE REALTY INC. BROKERAGE
UNIT 208 - 7 EASTRALE DRIVE, MARKHAM
ONTARIO, L35 4N8
Direct: 647-448-6464
Bus: 905-201-9977 Fax: 905-201-9229
Email: sangar.siva@hotmail.com
Web: www.sivashomes.com

INDEPENDENTLY OWNED AND OPERATED.



# நீர்வேலி நலன்புரி சங்கம் - கனடா
# நீர்வேலிக்கிளை
# வாழ்த்துச் செய்தி

நீர்வேலி சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காக பல வழிகளிலும் அயராது சேவையாற்றி வரும் கனடா நலன்புரிச்சங்கத்தினரின் வருடாந்த வெளியீடு ''வாழையடி வாழை'' 2009ஆம் ஆண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நீர்வேலி கிளைச்சங்கம் பெருமையடைகிறது.

எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் ''கல்வியே கருந்தனம்'' எனப்போற்றி செயற்பட்டுக் கொண்டிருக்கும் இவர்கள் எமது பிரதேசத்தில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு அரும்பணியாற்றி வருவதற்கு எமது கிராமத்தின் சார்பான நன்றிகளை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தூரநோக்கு தெளிந்த சிந்தனை, அயராத முயற்சி என்பவற்றை அடித்தளமாகக் கொண்டு இயங்கிவரும் இவர்களின் செயற்பாடுகள் என்றென்றும் போற்றுதற்குரியவை. அவசிய திருத்த வேலைகள், கற்றல் சாதனங்கள், ஊக்குவிப்பு பரிசில்கள், நிதியுதவிகள் செய்தல் போன்ற பல தரப்பட்ட பணிகளை தேவையறிந்து கொண்டு வருவதுடன் மேலும் பலதரப்பட்ட முன்னேற்றகரமான திட்டங்களுக்கு எம்முடன் தொடர்பு கொண்டு வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சொந்தப் பணிகளுக்கு மத்தியிலும் இந்தப் பெரும் பணியை ஆற்றிவரும் சேவை என்றென்றும் மறக்க முடியாதவை. மூன்றாவது ''வாழையடி வாழை'' மலர் வெளியீட்டிற்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்து இந்த அறப்பணியாற்றும் அனைவருக்கும் மீண்டும் எமது நன்றிகளைத் தெரிவித்து இவ் அரிய பணிகள் தொடர எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

வணக்கம்.

ஆ.இராசநாயகம்
தலைவர்



ஐ. சிவராசா
செயலாளர்



01. 11. 2009

EVEREST

Banquets & Convention Hall

Private VIP HD Theatre

ATM – Car Rentals

Amusement Centre

Bar & Restaurant

**Call 416-757-0007**

**www.everestbanquets.com**

# நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி முதல்வரின் வாழ்த்துரை

நீர்வேலி நலன்புரிச் சங்கம் கனடா அமைப்பு வரன்முறை தவறாது வெளியிடும் "வாழையடி வாழை" மலருக்கு வாழ்த்துரை வழங்கச் சந்தர்ப்பம் கிடைத்தமையைப் பெரும் பேறாகக் கருதுகிறேன். நீர்வேலி மண்ணின் மகிமையை வெளிப்படுத்தி நிற்கும் வாழை இனத்தை முதன்மைப்படுத்தி வாழையடி வாழை என்ற மலரை நீர்வேலி நலன்புரிச்சங்கம் - கனடா அமைப்பு வெளியிடுவது சங்கத்தின் தார்ப் பரியத்தை வெளிக்காட்டுகின்றது. நலன்புரிச்சங்கம் நீர்வேலி மக்களின் நலன்களில் அக்கறை செலுத்தி அவர்களின் வாழ்க்கைச் செளிப்பிற்கு வலுவூட்டி வருகின்றது.

மக்களின் அழியாச் சொத்து கல்வி என்பதை உணர்ந்து கல்வி மேம்பாட்டுக்காக நீர்வேலி பாடசாலைகளுக்கு நீர்வேலி நலன்புரிச் சங்கம் - கனடா நீண்ட காலமாக உதவி வருகின்றது. மாணவர்களின் ஆளுமைவிருத்திக்கு கல்வியும், விளையாட்டும் இரு கண்கள் போன்றவை. எமது அத்தியார் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு இரு கண்களையும் பிரகாசிக்கச் செய்ய நலன்புரிச் சங்கம் கைகொடுத்து வருகின்றது. 2009 ஆம் ஆண்டு எமது கல்லூரி மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளுக்காக ரூபா ஐம்பது ஆயிரமும் (RS 50000/=) பரிசளிப்பு விழா சிறப்புப் பெற ரூபா ஐம்பது ஆயிரமும் (RS 50000/=) நீர்வேலி நலன்புரிச் சங்கம் - கனடா அமைப்பினால் வழங்கப்பட்டமை எமக்குப் பெரும் உற்சாகத்தை அளித்துள்ளது.

கடல்கடந்த நாடுகளில் வாழும் எம் இனத்தவர்களில் பலர் தாம் நடந்து வந்த பாதையை கலாச்சார பாரம்பரியங்களை மறந்து மேலைத்தேச வாழ்க்கை முறைகளுக்கு அடிமையாகி வாழ்வதைக் காண்கிறோம். ஆனால் நீர்வேலி நலன்புரிச் சங்கத்தைச் சார்ந்தோர் தமிழ் இனத்தின் கலாசாரங்களை அழியவிடாது அவற்றை வளர்ப்பதில் அக்கறையுடன் செயற்படுகின்றனர் என்பதற்கு வாழையடி வாழை மலர் தக்க சான்றாகும். இளைய தலைமுறையினரிடையே ஆக்கத்திறன், சிந்திக்கும் ஆற்றல், அழகி யல் உணர்வு என்பவற்றை வாழையடி வாழை மலரின் ஊடாக வளர்த்து வருவது பாராட்டத்தக்கது. இத்தகைய பணிகள் எதிர் காலத்திலும் தொடர வேண்டும்.

இந்த வகையில் தலைவர் திரு. ஜீவா கோபலாசிங்கம், செயலாளர் திரு பசுபதி ஜெகன், பொரு ளாளர் திரு நமசிவாயம் ஞானேந்திரன் மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் அத்தியார் இந்துக் கல்லூரியின் சார்பில் எனது நல்வாழ்த்துக்கள் சங்கத்தின் பணி தொடர இறை யருளைப் பிரார்த்தித்து வாழையடி வாழை என்றும் நிலைத்து நின்று எம் கலாசாரம் காக்க வாழ்த்து கிறேன்.

நன்றி!



இரா. குணநாதன்
அதிபர், அத்தியார் இந்துக்கல்லூரி
நீர்வேலி
யாழ்ப்பாணம்


TASTE OF PARADISE INC
Wholesale Burger Manufacturer
Many types of Burgers to suit all occasions
* Beef Burger * Beef kabab * Chicken Burger
* Chicken Kabab * Chicken Wings * Meat Balls.
We sell only all-natural buffalo burgers
We believe that fresh is always best, and that's why we never compromise on taste and quality. Making the perfect burger is something we strive for every day.
Our premium Beef Burgers contain up to 98% Beef!!
The complete range suitable for all establishments.
For more information contact us.
Call: Jegan
7875 Tranmere Drive Unit 9
Mississauga,ON I5S 1T8
Cell: 416 999 8411 Tel: 416 885 7706, 416 822 2655
Fax: 416-891 8008

ATTIAR HINDU COLLEGE OLD BOYS GIRLS & WELL-WISHERS ASSOCIATION - UK
SVS HOUSE - OLIVER GROVE
LONDON, SE25 6EJ, UK
T: 020 8771 F: 020 8771 2224 E: thiru@accountancygroup.com

Our Ref:MT/SM

19 November 2009

The President & Committee Members
Neervely Welfare Association Canada
1411 - 234 Albion Road,
Etobicoke, Ontario, M9W 6A5,
Canada

Dear Friends

It is with great pleasure that we send you this message of friendship Solidarity and well wishes to all the members of your Association and participants in the forthcoming event "Valaiadi Vaalai" on the 5 December 2009.

We regularly learn about your Association's contributions to various projects in Neervely; long may this continue with the help of all your volunteers and members.

We all know how hard it is to organise events such as this; our appreciation and our thoughts are with you and we wish you all an enjoyable and fruitful event.

With Kind Regards

**For and on behalf of**
**Attiar Hindu Old Boys Girls and Well wishers Association UK**
**Neervely Welfare Association UK**

| | | |
|---|---|---|
| **M Thiruvasagam** | **S Subeshkumar** | **S Selvanathan** |
| **Hon President** | **Hon Treasurer** | **Hon Secretary** |

Quick Fence

Temporary Fence Rental Needs

Sales - Rental - Services

416 759 8222
1 866 940 8222

**Ontario's #1 fence solution.**

**FENCE & BARRICADE MANUFACTURER**

- Temporary Fence
- Barricade
- Barbed Wire
- Frame Fence
- Safety/Snow Fence
- Pipe
- Residential Tube
- Cantilever gates
- Wood Fence
- Residential Tube
- Residential Gates
- Chain link-Galvanized
- Chain link-vinyl-coated
- Dog Kennel
- Warehouse Fence
- Chain Link Swing gate
- Tubular Barrier gate
- Iron Fence





**Nimal Rasiah**

**3 Upton Road, Scarborough,**
**Ontario. Canada M1L 2C1**
**Phone: 416 759 8222**
**Toll-free: 1 866 940 8222**
**Fax: 416 642 4922**
**Email: info@quickfence.ca**








Member of Toronto Construction Association Inc.,

# சுவிஸ் நற்பணி சங்கம் வாழ்த்துகின்றது

நீர்வேலி நலன்புரிச் சங்கம் - கனடா அமைப்பினால் வெளியிடப்படும் வழையடி வாழை மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் சுவிஸ் நற்பணிச் சங்கத்தினராகிய நாம் பெருமகிழ்வு அடைகின்றோம். நீர்வேலி மண்ணின் மைந்தர்களாகிய எம்மவர்கள் ஒன்றுகூடி நற்பணிச் சங்கம் ஒன்றினை கனடாவில் அமைத்துப் பிறந்த மண்ணின் உயர்வுக்காக உழைத்து வருவது பாராட்டுதற்குரியது. நீர்வேலி மண்ணின் மகிமையைப் பறைசாற்றும் வகையில் தமது மலருக்கு "வாழையடி வாழை" என்ற பெயரினைச் சூட்டியிருப்பது காலத்தின் தேவையாகும். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் எம் உறவுகளில் பலர் இன்று எமது பாரம்பரிய கலாச்சாரங்களை மறந்து வருகின்றனர். இந்நிலையில் நீர்வேலி நலன்புரிச் சங்கம் - கனடா அமைப்பு வாழையடி வாழை மலரின் மூலம் கலாசாரப் பாரம்பரியங்களைப் பேணிப்பாதுகாப்பதிலும் இளைய தலைமுறையினருக்கும் இவற்றைக் கையளிப்பதிலும் வெற்றி கண்டு வருகின்றது.

நீர்வேலிக் கிராமத்தின் கல்வி நிலையங்களுக்கு நீர்வேலி நலன்புரிச் சங்கம் உதவி வரும் சேவைகளை எமது சங்க உறுப்பினர்கள் தாய் நாட்டிற்குச் செல்லும்போது நேரில் கண்டும் கேட்டும் அறிந்த போது பெருமகிழ்ச்சி அடைந்தோம். உண்மையில் என்றும் அழியாச் சொத்து கல்வி. அதன் மூலமே பண்பாடுள்ள ஆளுமை நிரம்பிய பிரசைகளை உருவாக்க முடியும். நீர்வேலி நலன்புரிச் சங்கம் இதை உணர்ந்து கல்வி நிறுவனங்களுக்கு உதவி வருவது பாராட்டத்தக்கது.

நீர்வேலி நலன்புரிச் சங்கத்தின் கல்விச் சேவையின் ஓர் அங்கமாகவும் கலாசார பாராம்பரியத்தின் சின்னமாகவும் வெளிவரும் வாழையடி வாழை மலர் சிறப்புற்று பொலிவுபெற சுவிஸ் நற்பணிச் சங்கத்தின் மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சங்க அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் எமது சங்கத்தின் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்வடைகின்றோம்.

நன்றி!

சுவிஸ் நற்பணிச் சங்கம்
சுவிஸ்
10.10.2009


UNIQUE LOCK SMITHS
Medeco High Security Locks
Master Keying & Mul-T-Lock Service
Building Maintenances
Car Keys & Door Closer
Card Access Systems
On-Call 24 Hour Services
UNIQUE
LOCKSMITHS
Siva
Cell: 416-618-5436
Tel: 416-494-7010
Professional Locksmith

# செயற்குழு உறுப்பினர்கள் 2009 - 2010



இடமிருந்து வலம் (இருப்போர்)
திரு. எஸ். பிறைசூடி, திரு. பி. ஜெகன், திரு. ஜீவா கோபாலசிங்கம், திரு. என் ஞானேந்திரன், திருமதி. ஜே. நிர்மலாதேவி
இடமிருந்து வலம் (நிற்போர்)
திரு. இ. கிரிகரன், திரு. எஸ். பழனிப்பிள்ளை, திரு. பெ பஞ்சலிங்கம், திரு. பி. பஞ்சநாதன், திரு. ஏ. சிறிதரன்,
திரு. ரி. சிறிநாதன், திரு. வே. பாலச்சந்திரன்


M & S HARDWOOD FLOOR INC
Price Beat Guarantee
Please call us at any time and
We would be happy to arrange for a FREE no obligation quote for Hardwood Floors or Granite counter tops
85 Ellesmere Road, Scarborough, ON M1R 5G8
Mahinthan: (647) 219-5824
Shankar: (416) 554-0897


SRI MURUGAN TRANSPORT INC
We provide a first class transportation service in Ontario. We may be one of the "little guys" for now, but the service received is far from little.
* Professional, courteous, quality trained personel
* Fully licensed and insured
* Special handling of computers/electronics
SRI MURUGAN
(416) 989-5222
* Residential and Commercial Moving in Toronto, Montreal and Ottawa Ontario
* Customer service is our number one concern.
உங்கள் சகல தேவைகளையும் நிறைவு செய்ய அழையுங்கள்
(416) 989-5222

# வாழையடி வாழை - 2009
# நிகழ்ச்சி நிரல்

**மங்கள விளக்கேற்றல்:**

திரு. சிவலிங்கம் கதிர்காமத்தம்பி (சங்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவர்)

**மௌன அஞ்சலி**

**தமிழ்தாய் வாழ்த்தும் கனடிய தேசியகீதமும்**

செல்வி. ஆரணி குலமுருகன் (சங்கீதபூஷனம் ஸ்ரீமதி குலநாயகி விவேகானந்தன் அவர்களின் மாணவி)

**சங்ககீதம் இசைத்தல்:**

இசைப்பவர்: செல்வி நிவேதா கணேசையா (சங்கீதபூஷணம் ராஜிகோபாலகிருஸ்ணன் (சென்னை) அவர்களின் மாணவி)

**வரவேற்பு நடனம்**

பரதக்கலைவித்தகர் ஸ்ரீமதி சிவசோதி கெங்காதரன் (நிருத்திய நிசேதனம் அதிபர் பரதக்கலை மாமணி ஸ்ரீமதி சூரியயாழினி வீரசிங்கம் அவர்களின் மாணவி)

**தலைவர் உரை**

**பிரதம விருந்தினர் உரை, கௌரவிப்பு:** திரு. எஸ்,கே. பாலேஸ் அவர்கள்

**3வது வாழையடி வாழை மலர் வெளியீடு:**

வெளியீட்டுரை: கலாநிதி சு. சிவநாயகமூர்த்தி (முன்னாள் பிரதிக்கல்விப்பணிப்பாளர்)

**பரதநாட்டியம்:**

செல்வி தாரணி உதயகுமார் (நாட்டிய கலாச்ஷேத்ரா அதிபர் செல்வி தேனுஜா சோதிலிங்கம் அவர்களின் மாணவி)

**விடுதலை நடனம்:** (ஒன்ராரியோ நுண்கலைக்கூட மாணவர்கள்)

(நெறியாக்கம்: ஒன்ராரியோ நுண்கலைக்கூட நடன ஆசிரியர் திருமதி சாந்தினி சிவரூபன்)

செல்விகள்: சணோஜா ஜெயகுமார், நிரோஜா பாலசேகரம் பிரியங்கா கிருஸ்ணதாசன், அரணியா வரதராசன், இவன்ஜலீன் உதயகுமார், ஆரபி உதயநேசன், அபிநயா மோகன், ஆதித்யா மோகன்

**போட்டிப் பரீட்சை பரிசளிப்பு**

**திரை இசை நடனம்:** செல்வன் செந்தூரன் தனபாலசிங்கம்

**பரதநாட்டியம்:** அபிநயாலயா நாட்டியாலய அதிபர் ஆடல்கலைமணி ஸ்ரீமதி ரஜனி செல்வப்பிரகாசத்தின்

மாணவிகள் - செல்விகள்: மௌனிகா சந்திரகுமார், சாரங்கா அருளானந்தம் பைரவி அருளானந்தம், லக்சனா குகதாசன், சரண்யா ரவீந்திரன், ஹம்சா பொன்னீஸ்வரன், டிலானி தர்மராஜா, லக்கிசா கேதீஸ்வரன், அக்சனா குகதாசன்

**சமூக சீர்திருத்த நகைச்சுவை நாடகம் : "குருட்டுப்பார்வை"**

நெறியாள்கை : திரு அமல்குமார் சின்னத்தம்பி

**அனுசரணையாளர் கௌரவிப்பு**

**இடைவேளை**

**அதிஸ்டக் குலுக்கல்**


**திரைஇசை நடனம் :** அபிநயாலயா நாட்டியாலய மாணவிகள்

**நகைச்சுவை பலகுரல் நிகழ்ச்சி:** வழங்குபவர் - கனடிய தமிழ்திரைப்படம் 1999இன் நடிகர் திரு. சுதன் மகாலிங்கம்

**திரை இசைநடனம்:** LLS நடனக்குழுவினருடன் இணைந்து மீண்டும் செல்வன் செந்தூரன் தனபாலசிங்கம

**நன்றியுரை : சங்கத்தின் செயலாளர் :** திரு ஜெகன் பசுபதி

**இன்னிசை நிகழ்ச்சி : "தென்றல் இசைக்குழு"**


MORTGAGE ALLIANCE
RESCOM FINANCIAL SERVICES
Licence No: 11272
RIGHT MORTGAGE AGENT CAN HELP YOU GET THE RIGHT FINANCIAL CHOICE!
First-Time Buyers
Renewals
Refinancing
Switch
Pre-approval
Self Employed
Poor Credit
Bankruptcies
New Immigrants
1st, 2nd mortgages
Equity Line of Credit
SIVA PONNIAH
MORTGAGE AGENT
M09000694
FOR ALL RESIDENTIAL MORTGAGES CALL DIRECT @ 416.807.SIVA (7482)
407-245 Fairview Mall Drive, North York, ON M2J 4T1
Tel: 416 642 4919 Fax: 416 640 0341
E-Mail: sivap@rescomfinancial.ca www.rescomfinancial.ca
A REGISTERED FRANCHISE OF THE MORTGAGE ALLIANCE NETWORK
Lalitha Digi Media 416 732 2933

# காலவெள்ளம்

சிறுகதை

**- நீர்வை பொன்னையன் -**

“அவன் எங்கையடா?” அவரது ஆவேசக் குரல் அப்பிரதேசத்தை ஆக்கிரமிக்கிறது.

வேலுப்பொடியன்ரை முச்சந்தியில் கூடி நிற்கின்றவர்களுக்குத் திகைப்பு. ஊரின் தென்மேற்கிலுள்ள புறம்போக்கு நிலத்தில் பெருங்கலட்டி.
பெருங்கலட்டியிலுள்ள பற்றைகளுக்குப் பின்னால் காலைக்கடனை முடித்தபின்பு ஒவ்வொருவராக வந்து, வேலுப்பொடியன்ரை முற்சந்தியில் கூடுவர்.. அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு குட்டி பாளிமென்ரை நடத்திவிட்டுத்தான் தங்கள் வீடுகளுகக்குச் செல்வது வழக்கம்.

குடும்ப விவகாரங்கள், ஊர் பிரச்சினைகள், கொடுக்கல் வாங்கல் பிணக்குகள், ஊர்வம்புகள், நாட்டு நடப்புகள், அரசியல் போன்ற விவகாரங்கள்தான் அந்தப் பாளிமென்ரில் பேசப்படும்.

போதிய ஆட்கள் வந்து சேர்ந்துவிட்டனர்.
இன்னும் பாளிமென்ற் தொடங்கவில்லை.

“அவன் எங்கையடா?” அவரது ஆவேசக் குரல் அங்கு கூடி நின்றவர்களைத் திணறடிக்கின்றது.
‘அவன் ஆராயிருக்கும்?’
‘அவன் ஆராயிருந்தாலென்ன. இண்டைக்கு அவன்ரை பாடு அதோகெதிதான்’ முற்சந்தியில் கூடி நிற்கின்ற ஒவ்வொருவர் மனதிலும் ஒவ்வொருவிதமான எண்ண அலைகள்.

“அந்தப் பிராமணப் பயல் எங்கையடா?”
இடுப்பில் நாலு முழக் கதிர் வேட்டி. தோளில் கதர் சால்வை. தலையில் குடும்பி. கையில் எந்த நேரமும் ஒரு மஞ்சள் நிற சீலைப்பை. இளமைத் தோற்றம். எலுமிச்சை பழநிறம். தொழில் ஊர் சேவை. அவன் பிராமணனல்ல. பட்டப்பெயர்.

“அட. அந்த அப்பாவி யார்?” ஒருவர்.

“முடிஞ்சுது. இண்டைக்கு அந்த வேதவனத்தின்ரை பாடு அதோ கதிதான்” மற்றவர்.

“அந்த அப்பிராணி மிதிச்ச இடத்துப் புல்லும் சாகாதே.”
“தன்ரை வாழ்க்கையை ஊர்சேவைக்காக அற்பணிச்ச பொடியனாச்சே அதுக்கா இந்தப் பேரிடி.”

“நேற்றுப் பொழுது படேக்கைதான் அந்த வேதவனமும் இவர் பெரியண்ணையும் கலகலப்பாய் கதைச்சு சிரிச்சுப் பேசிக்கொண்டு போனதை நான் பாத்தன்” வேலுப்பிள்ளை.

“பெரியண்ணை” எண்டுதான் அந்த ஊரிலை உள்ள சிறுவர் தொடக்கம் பெரியவர்கள்வரை தில்லையம்பலத்தை உரிமையோடை வாஞ்சையுடன் அழைக்கின்றார்கள்.

“நேற்றென்ன, மூண்டு நாட்களாய் எங்கடை ஊரின் வடமேற்குப் புறத்திலுள்ள காந்தி நகரிலை வேதவனம் ஒரு பெரிய மகாநாட்டை நடத்தினார். அது வெற்றிகரமாய் நடந்து முடியிறதுக்கு பெரியண்ணை மும்முரமாய் அலுவல் பார்த்தவர்.

“வேதவனத்தின்ரை வலது கையாய் மூண்டு நாட்களும் பெரியண்ணை கடுமையாய் செயல்பட்டார். அப்பிடிப்பட்ட அவர் இண்டைக்கு வேதவனத்தைத் துலைச்சுக்கட்டத் துடிக்கிறாரே” கணபதிப்பிள்ளை மனம் வெதும்பிக் கூறுகின்றார்.

சவாரிச் செல்லன்ரை பூவரசம் வேலி. வேலியிலுள்ள பூவரசம் கதியால் ஒன்றை பெரியண்ணை துள்ளி, எட்டிப்பிடித்து, இடுங்கி இரண்டாய் முறிக்கின்றார். இண்டைக்கு என்ன நடக்கப்போகுதோ? முச்சந்தியில் கூடி நிற்கின்றவர்களுக்குப் பதட்டம்.

“இந்தப் பெரியண்ணைக்கு என்ன புடிச்சிட்டுது? இவர் என்ன இப்பிடி அட்டகாசம் பண்ணிறார்?”
அவர்கள் மனதில் கேள்வி. எங்கடை ஊரிலை மூண்டு நாட்களாய் மறு மலர்ச்சி மகாநாட்டை சிறப்பாய் நடத்தி முடிச்சார் வேதவனம். நேற்றுத்தான் மகாநாட்டின் கடைசி நாள்.

"நேற்று மகாநாட்டில் பங்குபற்றிய எல்லாருக்கும் சமபந்திப் போசனம். அதையும்கூட பெரியண்ணை நிண்டு மும்முரமாய் நடத்தி முடித்தார். அப்பிடிப் பட்டவருக்கு இண்டைக்கு என்ன புடிச்சிட்டுது.? ஏன் இப்பிடி அட்டகாசம் பண்ணிறார்?"
பெரியண்ணனின் நெருங்கிய நண்பன் சண்டியன் சண்முகத்தைக் கேட்கின்றார் பாஞ்சான் கந்தையா.

"இப்ப இவர் பெரியண்ணை ஏன் வேதவனத்தை அடிச்சு முறிக்கத் துடிக்கின்றார்?" கார்த்தி கேசுவின் கேள்வி.

"மறுமலர்ச்சி மகாநாட்டுக்கு வந்திருந்த இருநூற் றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் எல்லாருக்கும் எங்கடை ஊர் மக்கள் ஒண்டுசேர்ந்து மூண்டு நாட் களும் மூண்டு நேரமும் உணவளித்தம்."

"மகாநாட்டு மண்டபத்துக்குப் பக்கத்திலுள்ள மூண்டு வீடுகளையும் எடுத்தம். காலை, பகல், இரவு உணவு வகைகளை அந்த மூண்டு வீடு களிலும் சமைத்து வழங்கினம். அரிசி, காய் கறி-வகைகளைச் சேர்ப்பதில் பெரியண்ணைதான் முன்னுக்கு நிண்டு செயல்பட்டார். அவரது தலை மையில் தான் 'சாப்பாட்டு சபை'களும் நடந்தன. சிறப்பாய் நடந்துது.

எங்கடை ஊரிலை நடக்கிற நன்மை தீமைகள் எல்லாம் பெரியண்ணையின்ரை தலைமையில்தான் நடந்து வருகின்றன. அவனன்றி அணுவும் அசை யாது. அதைப்போல பெரியண்ணையின்றி எந்தப் பொதுக்காரியமும் நடைபெறுவதேயில்லை.

எங்கடை மக்களுக்காகப் பெரியண்ணை தன் னைப் பூரணமாக அர்ப்பணித்துள்ளார். எங்கடை ஊர்க்கட்டுப்பாட்டை எவரும் மீறி நடக்கமுடியாது. அதுக்குப் பெரியண்ணை எள்ளவும் இடம் குடார். பெரியண்ணை தனிக்கட்டை.. திருமணம் முடிக் காத ஐம்பது வயது பிரமச்சாரி.

பெரியண்ணனுக்கு ஐந்து சகோதரிகள். அவர்தான் குடுப்பத்தில் மூத்தவர்.
அவரது இளம் வயதிலேயே பெற்றோரை இழந்து விட்டார். குடும்பச் சுமை அவரது தலையில். போதிய நிலபுலன்களை அவரது பெற்றோர் விட்டுச் சென்றிருந்தனர். கஷ்டப்பட்டு உழைத்து தன் ஐந்து சகோதரிகளையும் கரை சேர்த்து விட்டார். அவருக்கு கல்யாண வயசு கடந்து விட்டது. இப்போ அவர் கட்டைப்பிரமச்சாரி.

பெரியண்ணை எப்படி கஷ்டப்பட்டு உழைத்தாலும் அவர் பொது வேலைகளில் ஈடுபடுவதில் என்றுமே பின் நின்றதில்லை. அவரது தோட்டத்தில் வேலை செய்வதற்கு நீ முந்தி, நான் முந்தி என்று போட்டி போட்டுக்கொண்டு, ஐயாவத்தை, நாவலடி போன்ற குறிச்சிகளைச் சேர்ந்த எட்டுப் பத்துப் பேர் முன் வருவார்கள்.

பெரியண்ணையின் தோட்டத்தில் வேலை செய்கின்ற குடும்பங்களுக்கு, அவர்கள் செய்யும் வேலைக்கு பெரியண்ணை ஒருநாளும் கூலி கொடுப்பதில்லை. அவர்களுக்கு சாப்பாடு தாரா-ளம். காலையில் குரக்கன் புட்டு அல்லது 'கூப்பன்மாப்' புட்டும் மரவள்ளிக்கிழங்குக் கறியும், தேத்தண்ணி சீனியுடன். மத்தியானம் நெல்லரிசிச் சோறும் இரண்டு மூன்று கறிகளும்.

அவரது 'குடிமக்களின்' நன்மை தீமைகளில் பெரி யண்ணை பங்கெடுப்பார். இறப்புப் பிறப்புக்கள், திருமணங்கள் போன்ற காலங்களின்போது பெரி யண்ணைதான் செலவுப் பொறுப்பு. தாராளமாய் பெரியண்ணை தனது பணத்தைச் செலவு செய் வார்.

சித்திரை புதுவருசப்பிறப்பு, தீபாவளிப் பண்டிகைக் காலங்களில் பெரியண்ணை தன் குடிமக்களுக்கு புது உடுபுடவைகள் கொடுப்பது வழக்கம். ஆண் களுக்கு நான்கு முழக் 'காரிக்கன்' வேட்டிகளும் சிறுவர்களுக்கு நரமுண்டுத் துண்டுகளும் சிறுமி களுக்கு சீத்தைச் சட்டைகள். பெண்களுக்கு 'காடுவெட்டி'ச் சேலைகள் கொடுப்பார். எல்லோரும் பெரியண்ணை வீட்டுக்கு வந்து உடுப்புகளை எடுத்துச் செல்வார்கள்.

புதுவருடக் கைவிஷேசம் தலைக்கு ஒருரூபா. குடிமக்களின் கலியாணவீடு, மரணவீடு, நோய் நொடிக் காலங்களில் பெரியண்ணை பார்த்து பாராமல் செலவு செய்வார் பணத்தை.

ஊரில் உள்ள கோவில்களின் கட்டுமான திருப் பணி வேலைகளிலும் பெரியண்ணை முன்னின்று ழைப்பார்.

கிராமத்தில் ஏற்படும் பிணக்குகளையும் சண்டை சச்சரவுகளையும் தனது அதிகாரத்தையும் சம யோசித புத்தியையும் பாவித்து தீர்த்து வைப்பார். இதற்கு கிராம மக்கள் பெரியண்ணையைத்தான் எதிர்பார்க்கின்றனர்.

எங்கள் ஊரின் ஒற்றுமை, கட்டுக்கோப்பு, முன்னேற்றம் ஆகியவற்றில் பெரியண்ணை எப் பொழுதும் கண்ணும் கருத்துமாக அக்கறை செலுத்தி வருகின்றார்.

எங்கள் ஊரைச் சேர்ந்த ஆசாரி கந்தசாமி, கோவில் தேர் செய்ய சிங்கப்பூர் சென்றார். மூன்று வருடங்களின் பின் அவர் பெரும் பணக்காரனாக திரும்பி வந்தார். பணக்கார ஆசாரி கந்தசாமி ஊரில் எவரையும் மதிப்பதில்லை. ஆசாரி கந்த சாமியின் தந்தை திடீர் என மாரடைப்பால் இறந்துபோனார். தந்தையின் செத்தவீட்டை பெரும் டாம்பீகமாகச் செய்து தனது அந்தஸ்த்தை நிலைநாட்ட எண்ணினார் கந்தசாமி.

தேர் சாயலில் பாடை கட்டப்பட்டது. கரையூரில் இருந்து ஐந்து கூட்டம் பறை மேளம் கொண்டு வரப்பட்டது. இதைத் தடுக்க பெரியண்ணராக்கள் முயற்சித்தனர். பலனில்லை..

பொலிஸ் காவலுடன் பிரேதம் எடுக்கப்பட்டது. சில நாட்களின் பின் ஆசாரி கந்தசாமி தனது வில் வண்டியில் யாழ்ப்பாண பெரியபட்டணம் சென்றிருந்தார். ஆசாரி வீடு திரும்பும்பொழுது நள்ளிரவாகிவிட்டது. எங்கள் ஊர் தெற்கெல்லை யில் உள்ள கூத்தாடுவான் குளத்தடியில் நான்கைந்து பேரின் நடமாட்டம்.

விடிந்ததும் விடியாததுமாக கறுவல் கொத்தான் காலைக் கடன் முடிக்க வயல் வெளியிலுள்ள அலரிப்புட்டிக்குச் செல்கின்றார். கூத்தாடுவான் குளத்தடியில் தேடுவாரற்ற நிலையில் ஒரு வில்லு வண்டில். மாடுகளைக் காணவில்லை. முனகல் சத்தம். எங்கிருந்து வருகிறது?

வில்லு மதகின் கீழிருந்துதான் முனகல். சுற்றப் பட்ட புல்பாய்க்குளிருந்துதான் சத்தம் வரு கின்றது. வழிப்போக்கர் இருவரின் உதவியுடன் சுற்றப்பட்ட புல்பாய் வெளியே எடுக்கப்படுகின்றது. அடிகாயங்களுடன் ஆசாரி கந்தசாமி.

ஒரு மாதத்திற்கு மேல் யாழ்ப்பாணம் பெரியாஸ் பத்திரியில் படுத்த படுக்கையாக கந்தசாமி.
கந்தசாமியின் கைகால்கள் சரியாகச் செயல்பட மறுக்கின்றன. நான்கு மாதங்களுக்கு மேலாக கந்தசாமியால் வெளியே நடமாட முடியவில்லை. பொலீஸ் வந்தது. விசாரணை நடந்தது. பலன்? பெரியண்ணையாக்கள்தான் தன்னை அடித்து முறித்தது என்று ஆசாரி கந்தசாமிக்கு நன்றாகத் தெரியும். பயம் காரணமாக கந்தசாமியால் வாய் திறக்க முடியவில்லை. அடித்தவர்கள் யார் என்று தனக்குத் தெரியாதென திட்டவட்டமாகக் கூறி விட்டார் ஆசாரி கந்தசாமி.

“பெரியண்ணை”

“என்ன வேதவனம்? ”

உங்கடை உதவியாலை நேற்றும் இண்டைக்கும் எங்கடை மகாநாடு சிறப்பாய் நடந்துது. நாளைக்கு மகாநாட்டு கடைசி நிகழ்ச்சி. அதுதான் மிக முக்கியமானது. அதன் வெற்றியும் சிறப்பும் உங்கடை ஒத்துழைப்பிலைதான் தங்கிக்கிடக்கு.

“அதென்ன?”

“மகாநாட்டின் உச்ச கட்டம்தான் சமபந்திப் போசனம்.”

“அதுக்கு நான் என்ன செய்யக்கிடக்கு?”

எங்கடை ஊரிலையுள்ள கம்பன் புலக் குறிச்சி ஆட்களின்ரை பகுதியைச் சேர்ந்த ஏழெட்டு பேர் இந்த இரண்டு நாள் மகாநாட்டிலை பங்குபற்றி யிருக்கினை.

அவையோடை நாவலடியைச் சேர்ந்த யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி அற்றெண்டன் பசு பதியும், கம்பன் புலத்தைச் சேர்ந்த மெக்கானிக் இராசதுரையும் இரண்டு நாள் மகாநாட்டிலையும் பங்குபற்றியிருக்கினை.”

“அப்பிடியா!” எங்கள் ஒருதருக்கும் தெரியாமல் போச்சே.” என்னாலை நம்பமுடியேல்லை.
வியப்புடன் கூறுகின்றார் பெரியண்ணை.

“அவை ஆட்களோடை ஆட்களாய் சேர்ந்து இருந்தினை. அதைப்போலை நாளைக்கு நடக்கிற சமபந்திப் போசனத்திலையும் அந்தப் பகுதியைச் சேர்ந்த சில ஆட்களும் பங்குபற்றினால்...”

“என்ன பேக்கதை கதைக்கிறாய்? எங்கடை ஊராட்களுக்கு இது தெரிய வந்து பெரிய பிரச்சினையாய் போம். எங்கடை ஊர்கட்டுப்பாடு?”

“அதில்லை பெரியண்ணை. நேற்றும் இண்டைக்கும் நாங்கள் பாடுபட்டது வீணாய்ப்போகும்.

“அப்பென்ன செய்யிறது?”

ஐயாவத்தை, நாவலடியைச் சேர்ந்த மூன்று நாலு பேர் சமபந்தி போசனத்திலை பங்குபற்றினால் நல்லாயிருக்கும்.”

“எங்கடை ஊராக்கள் என்ன சொல்லுவினமோ...” பெரியண்ணை எங்கடை ஊர் இளம் பொடியளோடை நாங்கள் கதைச்சிருக்கிறம். அவை எல்லாருக்கும் சம்மதம். எங்கடை ஊர்பெரியாக்களை நீங்கள்தான் ஒருமாதிரி சமாளிக்க வேணும்.”

‘இளசுகள்தான் முக்கியம். எங்கடை ஊர் முன்னேற்றத்துக்கு அவங்கள்தான் முன்னுக்கு நிண்டு பாடுபட்டுழைக்கினை. அவையோடை ஒத்துழைக்காட்டி எங்களாலை ஒண்டும் செய்யேலாது. இந்த விசயத்திலை அவையோடை நாங்கள் பட்டும் படாமலும் சேர்ந்தோட வேண்டியதுதான்.’

“சரி, ஊராக்கள்?”

“பெரியண்ணை நீங்கள் நினைச்சால் அவையளைச் சமாளிச்சுப் போடுவியள்.

“வேதவனம் நீ ஆரையாவது கேட்டுப்பார்த்தியா?” “நான் நாலைஞ்சுபேரைக் கேட்டன். அவை பயத்திலை தயங்கிக்கொண்டிருக்கினை.”

“நீங்கள் சம்மதிச்சால் அந்த நாவலடி சரவணையும் கம்பன் புலத்து காத்தியும் தாங்கள் தயார் எண்டு சொல்லினை. நீங்கள் என்ன சொல்லிறியள்?”

“இனி என்ன செய்யிறது? அப்பசரி. காரியம் ஒப்பேற வேணுமே.”

“அப்ப நாங்கள் அவையளைக் கூப்பிடுகிறம்.

“ஆனா ஒண்டு வேதவனம்.”

“என்ன பெரியண்ணை?”

“சரவணையாக்களைத் தலைப்பந்தியிலை இருத்தாதையுங்கோ அவையளை, பந்திக்கு இடையிலையும், தொங்கலிலையும் ஆக்களோடை ஆக்களாய் இருத்துங்கோ. நான் அந்தப் பக்கம் வரேல்லை.”

மறுமலர்ச்சி மகாநாடு சமபந்தி போசனத்துடன் வெற்றிகரமாய் நடந்து முடிந்தது. மகாநாட்டு முடிவிலை நடந்த சமபந்தி போசனம் பற்றி ஊரிலை இரவிரவாய் பலவகையான கதைகள் புகைந்தன.

இந்த விவகாரம் விடியுது விடிய முந்தி பெரியண்ணை காதிலும் விழுகின்றது. காலையிலேயே பெரியண்ணையின் அட்காசம் வெடித்தது.

“அவன் எங்கையடா?”

“அந்தப் பிராமணப்பயல் எங்கை போட்டானடா?”

“அவனை இண்டைக்கு நான் அடிச்சு முறிக்கிறன். அவன்ரை குடும்பியை அறுத்தெறியிறன். அவன் எங்கை போட்டானடா?”

அரை மணி நேரத்துக்கு மேல், பெரியண்ணை, வேலுப்பொடியன்ரை முற்சந்தியிலை நிண்டு அட்டகாசம் பண்ணிக் கமறுகின்றார். கமறிக் களைத்த பெரியண்ணை தன் வீட்டுக்கு செல்கின்றார்.

“அண்ணை அந்த வேதவனத்தை அடிச்சு முறிச்சுப் போட்டியே?” சகோதரி அன்னம் கேட்கின்றாள்.

"பாவம். அது இப்ப எந்த ஆஸ்பத்திரியிலை கிடக்குதோ? நீயும் வாறியே போய்ப்பாப்பம்." அன்னதின் பேச்சில் கிண்டல்.

"அவன் என்ரை கண்ணிலை பட்டானெண்டால் தெரியும் அவன் படுகிறபாட்டை"

"திண்ணைப் பக்கம் ஒருக்கா திரும்பிப் பாரண்ணை" கேலியாக அன்னம்.

திண்ணைக்குக் கட்டியிருக்கின்ற கிடுகுத் தட்டி மறைவில் வேதவனம்.

"நீ இஞ்சையா இருக்கிறாய்?" ஆச்சரியமாய் பெரியண்ணை.

"வேலுப்பொடியன்ரை முற்சந்திப் பக்கம் போகாதை."

"வேம்படி வயிரவர் கோயிலுக்குப் பின்னாலை போற ஒற்றையடிப் பாதையாலை போ."

"நீதானே எனக்குச் சொன்னாய் பெரியண்ணை"

"அப்ப அவன் எங்கை?"

முற்றும்.

# நீர்வை பொன்னையன்....

நீர்வை பொன்னையன் ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர்களில் ஒருவர். யாழ்ப்பாணம் நீர்வேலியில் பிறந்த இவர் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் தொடக்கக் கல்வி கற்று பின்னர் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பி.ஏ பட்டதாரியானார்.


**இவரது நூல்களல் சில....**

- **மேடும் பள்ளமும் (1961)**
- **உதயம் (1970)**
- **மூவர் கதைகள் (1971)**
- **பாதை (1997)**
- **வேட்கை (2000)**
- **உலகத்து நாட்டார் கதைகள் (2001)**
- **முற்போக்கு இலக்கிய முன்னோடிகள் (2002)**
- **நாம் ஏன் எழுதுகின்றோம்? (2004)**


S.S.R TRANSPORT LTD
416-881-0819
S.S.R
TRANSPORT LTD
Ganesh
Tel: 416 881 0819, Cell: 416 881 0819, Fax: 905 459 4919
Email: tinesh4u_67@hotmail.com
Residential and Commercial Moving in Toronto, Montreal
Kingston, Ottawa, London, Windsor, Berry, Northbay & Niagara falls.
We make an effort to learn our customers' needs and provide the people, equipment and technology to meet them.

# NEERVELY WELFARE ASSOCIATION -CANADA

## COMPETITION PARTICIPANTS 2009



# NEERVELY WELFARE ASSOCIATION -CANADA

## COMPETITION PARTICIPANTS 2009

















# NEERVELY WELFARE ASSOCIATION -CANADA

## COMPETITION PARTICIPANTS 2009













Duty is ours! Success is Your

# ஒன்ராறியோ நுண்கலைக் கூடம்

# Ontario Academy of Fine Arts

## 1ம் வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை


அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் நிர்வாகத்தில்

ஒன்ராறியோ பாடத்திட்டத்திற்கமைய தராதரம் பெற்ற ஆசிரியர்களினால்
கலையுடன் கல்வியும் இணைத்து நடாத்தப்படுகின்றது.

**1ம் வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை**

Oafa

OAC 1997



**Ontario Academy of Fine Arts**

- Vocal
- Veena
- Flute
- Violin
- Ghatam
- Mrudhangam
- Tabla
- Bharathanatyam
- Keyboarding
- Piano
- Guitar
- Drum

**Ontario Academy of Science**

- Math
- Science
- English(E.S.L)
- English(Regular)
- Physics
- Biology
- Chemistry
- Accounting

**Summer Camp**
**Full Time**
**July - August**
**Grade 1 Grade 8**

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
**சங்கர்** அல்லது **மோகன்**

**Tel: 416.609.8314 / 647.588.8314 / 647.403.8314**

880 Ellesmere Road, #203B, Scarborough, Ont. M1P 2W6
**www.oasa.net E-mail: oafa@oafa5.com**

# நீர்வேலி நலன்புரி சங்கம் - கனடா

# NEERVELY WELFARE ASSOCIATION - CANADA

# COMPETITION WINNERS LIST

## COMPETITION - MATH

| Grade | Name | Place |
|---|---|---|
| **GRADE 2** | Piramitha Sivarajah | 1st |
| | Kishore Karan | 2nd |
| | Luxsa Nanthakumaran | 3rd |
| **GRADE 3** | Sajan Prabakaran | 1st |
| | Ananya Jegatheeswaran | 2nd |
| | Kiyasan Nanthakumaran | 3rd |
| **GRADE 4** | Saajiivan Sivathasan | 1st |
| | Sharangah Arulanantham | 2nd |
| | Sujeevan Kaviarasan | 3rd |
| **GRADE 5** | Keirthi Rajaratnam | 1st |
| **GRADE 6** | Theashan Chandrakumar | 1st |
| | Vithusan Jegatheeswaran | 2nd |
| | Shabhanu Karan | 3rd |
| **GRADE 7** | Sangavi Srinathan | 1st |
| | Bharath Sritharah | 2nd |
| | Anojan Gnanendran | 3rd |

## SPELLING BEE COMPETITION

| Level | Name | Place |
|---|---|---|
| **PRIMARY** | Kiyasan Nanthakumar | 1st |
| | Bairavi Arulananthan | 2nd |
| | Sajan Pirabakaran | 3rd |
| **JUNIOR** | Keirth Rajaratnam | 1st |
| | Sharangah Arulanantham | 2nd |
| | Saajiivan Sivathasan | 3rd |
| **INTERMEDIATE** | Anojan Gnanendran | 1st |
| | Bharath Sritharan | 2nd |
| | Sangavi Srinathan | 3rd |

## COMPETITION - TAMIL

| Level | Name | Place |
|---|---|---|
| **PRIMARY** | Luxsa Nanthakumaran | 1st |
| | Bairavi Arulananthan | 2nd |
| | Abirami Thevarajah | 3rd |
| **JUNIOR** | Kiyasan Nanthakumaran | 1st |
| | Sharangah Arulanantham | 2nd |
| | Saajiivan Sivathasan | 3rd |
| **INTERMEDIATE** | Bharath Sritharan | 1st |
| | Sangavi Srinathan | 2st |
| | Vithushan Jegatheeswaran | 3rd |

## SPECIAL AWARDS

**SPELLING BEE:** Luxsa Nanthakumaran

**TAMIL :** Aravin Selvarajah

**MATH :** Neerjaa Sritharan

# ROYAL BROKERS

Corporation





**SIVA MAILVAGANAM**

INSURANCE & INVESTMENTS BROKER
ROYAL BROKERS CORPORATION
80, NASHDENE ROAD, UNIT 26 TORONTO ON M1V 5E4
DIR: 416-230-2991 FAX: 416-298-4664
E-MAIL: RAJAH.SIVA@YAHOO.CA

# INSURANCE & INVESTMENT SOLUTIONS

**காப்புறுதி மற்றும் கல்வி சேமிப்பு திட்டம் சம்மந்தமான இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்!**

* Life Insurance
* Income protection
* Disability Critical illness
* Mortgage Insurance
* Travel Insurance
* Self employed health Insurance
* RRSP & RESP
* Segregated funds from RBC.

RBC Canada Life INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.

# சைவநீதியும் தமிழ் இனமும்



## புலோலியூர் கலாநிதி விபுலானந்த அடிகள்

மேன்மைகொள் சைவநீதி என்று பெரியவர்களால் போற்றப்பட்டது சைவநீதி. சைவம் தமிழை புனிதப்படுத்தியது. சைவநீதி தமிழ் இனத்தை வளம் படுத்தியது. "தமிழோடிசை பாடல்" மறந்தறியேன் என்கிறார் நாவுக்கரசர். தமிழ் புனிதமான மொழி, இறைஉணர்வோடு தமிழைப் படிக்கின்றபோது, தமிழால் இறையை இசை பாடுகின்றபோது இறை அற்புதங்கள் நிறையவே நடந்திருக்கின்றன. ஆதி அந்தம் அற்ற பரம்பொருளை ஆதிகாலம் தொட்டே தமிழ் இனம் வணங்கிவருகிறது. திருவள்ளுவர் முதற் குறளில் "ஆதிபகவன் முதற்றே உலகு" என்று இறைவனாகிய ஆதிசிவனைக் கூறுகின்றார். "கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவன் நற்றாள் தொழாரெனின்" என்று இறைவனுடைய பாதங்களைத் தொழாதவர் படித்ததனால் என்ன பயனைப் பெறப்போகிறார்கள்? என்கிறார் வள்ளுவர்.

வள்ளுவர் தன் குறளில் மொழிக்கு முதல் வணக்கம் கொடுக்கவில்லை, பதிலாக இறைவனுக்கே முதல் மரியாதை கொடுக்கின்றார். மணிவாசகப் பெருமான் திருவாசகத்தின் முதலடியிலே "நமசிவாய" வாழ்க என்று இறைநாமத்தை முதலடியாக வைத்து "நாதன்தாழ் வாழ்க" என்று இரண்டாவதடியாக ஏற்றியுள்ளார்.

திருக்குறளை முதன்மைப்படுத்தும் இன்றைய பெரும்பாலான படிப்பாளிகளும். இலக்கியவாதிகளும், கலைஞர்களும், கவிஞர்களும், தமிழழை மேன்பைப்படுத்துபவர்களாகவே காணப்படுகின்றார்கள். ஆனால் இறைவனை மேன்மைப்படுத்துவது மிக மிகக் குறைவாகவே உள்ளது. இதற்கு என்ன காரணம் சோழ சாம்ராட்சியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு இறைவனுடைய வழிபாடு குறைந்து பின்நாளில் வந்த அரசர்களும் சமயப்பணியாளர்களும் சிறு தெய்வங்களின் வழிபாட்டில் தாமும் ஈடுபட்டு மக்களையும் தவறாக வழிப்படுத்தினார்கள். இதனால் தமிழர்களின் பாரம்பரிய சமயமான சைவசமயம் கைவிடப்பட்டு வந்தது சிவவழிபாடும் குறையத் தொடங்கியது.

சைவநீதி சிறிது சிறிதாகக் குறையத் தொடங்க சிறுதெய்வ வழிபாடு பெருகியது, அம்மனை மேன்மைப்படுத்தத் தொடங்கினார்கள். இன்று சமயம் அற்ற வெறும் வழிபாடே காணப்படுகின்றது. 1300ம் ஆண்டளவில் தமிழ்நாட்டை கன்னட இனத்தவர்களான விஜயநகரத்தார் கைப்பற்றினார்கள். அவர்களிடம் தமிழர்கள் அடிமையாகியது முதல் அம்மனை மேன்மைப்படுத்தி வழிபடத் தூண்டினார்கள், 1650ம் ஆண்டளவில் கன்னடத்தாரிடமிருந்து நாயக்கரான தெலுங்கர் தமிழ்நாட்டைக் கைப்பற்றினார்கள் இவர்களும் அம்மன் வழிபாட்டைத்தான் மேன்மைப்படுத்தினார்கள். அத்தோடு தமிழ்நாடெங்குமுள்ள பெரும் ஆலயங்களுக்கு தெலுங்கு இனத்தவரான அர்ச்சகர்களை பணிபுரிய வைத்தார்கள். இன்று தமிழ்நாட்டில் ஆலயங்களில் பணிபுரியும் அர்ச்சகர்களில் பெரும்பாலானவர்கள் தெலுங்குப் பிராமணர்களே.

இன்று அரச நிர்வாகங்களில் முன்நிற்பவர்களும் தெலுங்குப் பிராமணர்களே, இன்று தமிழ்நாட்டில் சைவத்தை வளரவிடாது முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் தெலுங்குப் பிராமணர்களே, பிரித்தானியரின் ஆட்சியில் தமிழ்நாட்டு அரசகருமங்களில் அதிகளவில் இருந்தவர்கள் தெலுங்குப் பிராமணர்களே, இந்துக்கள் என்று தமிழ்களை சொல்லவைத்தும் சைவசமயத்தை வளரவிடாமலும் இடையூறாக இருந்து கொண்டு தமிழ் இனத்தை பலமிழக்கச் செய்துகொண்டு மேன்மையோடு வாழ்ந்து வருகின்றார்கள் தெலுங்குப் பிராமணர்கள்.

**தமிழ் இனத்தை மேன்மையோடு வாழவைத்தது சைவசமயமே! எதிர்காலத்தில் தமிழினத்தை மேன்மையோடு வாழவைக்கப்போவதும் சைவசமயமே!** தென்நாடு சிவவழிபாட்டுக் குரியபூமி, இதிலே இலங்கைத் தீவு "சொர்க்கபூமி" இலங்கைத் தீவிலே சிவவழிபாடு அதிகரிக்கின்றபோது சொர்க்க பூமியாக மாறும். ஐந்து ஈஸ்வரங்களைக் கொண்டதும், சிவனொளிபாத மலையைக் கொண்டதுமான சிவபூமியில் சிவநாமம் அதிக அளவில் ஒலிக்கின்றபோது சொர்க்கபூமியாக மாறும்.

சிவாலயங்கள் தோறும் நேரம் தவறாது பூசைகள் நடைபெறும்போது, சிவவிரதங்களை மக்கள் தவறாது கடைப்பிடிக்கின்றபோது, சிவாலயதரிசனத்தை மக்கள் தொடர்கின்றபோது சைவநீதி வெளிப்படும், நல்ல அரசியல் தலைவர்கள் வெளிப்படுவார்கள், கிராமங்கள் தோறும் நல்ல வழிகாட்டிகள் தோன்றுவார்கள். மக்கள் தேவர்களைப்போன்று வாழுவார்கள். "சிவ சிவ" என்றிடத் தேவருமாவர் என்று திருமூலர் திருமந்திரத்தில் சொல்லியிருக்கின்றார். இன்றைய தமிழ் மக்கள் பொது வைபவங்களிலே தமிழ்த்தாய் வாழ்த்துப் படித்து மொழிக்கு முதல் மரியாதை கொடுக்கின்றார்கள். தமிழ் ஞானியான திருவள்ளுவரே தமிழ்மறையான திருக்குறளில் முதல் அதிகாரமாக கடவுழ்வாழ்த்துப் பாடியிருக்கின்றார். முதற்குறளிலே "ஆதிபகவன்(ஆதிசிவன்) முதற்றே உலகு" என்று குறள் பாடியிருக்கின்றார்.

இன்றைய தமிழ் இலக்கியவாதிகளும், சமூக வழிகாட்டிகளும் தாங்கள் அறிவாளிகள் என்று ஒப்பிப்பதற்கு திருக்குறளை உதாரணம் காட்டிக் கொள்வார்கள் ஆனால் திருக்குறளை எந்தளவு புரிந்துள்ளார்கள் என்பது கேள்விக்குறியாக உள்ளது. திருக்குறளில் முதலாம் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்தைப் புரிந்து செயல்படும் தமிழ் இலக்கியவாதிகளை இன்று காண்பது அரிதாக இருக்கின்றது. சமயத்தை நீக்கிவிட்டு மொழியை முதன்மைப்படுத்துவது அறியாமையே. தமிழோடு இறைவனை இசைபாடி மக்களை வழிகாட்ட வேண்டும். மக்கள் வழிகாட்டிகளை நம்பியே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். வழிகாட்டிகள் இறைநம்பிக்கை உள்ளவர்களாகவும், சைவத்துக்கு முதல் மரியாதை

கொடுப்பவர்களாகவும் இருக்கவேண்டும்.

ஐரோப்பியர்களுக்கு அடிமைகளாக வாழ்ந்த போது அவர்களுடைய நடை உடை பாவனையையும் மேலோட்டமான வாழ்க்கை முறையையும் தமிழர்கள் பின்பற்றினார்களே தவிர அவர்களிடமிருந்த சமய நம்பிக்கையையும், அவர்கள் தங்கள் சமயத்துக்கு முதல் மரியாதை கொடுப்பதையும் ஊடுருவிப் பார்க்கவில்லை. சோழர்கள் சைவசமயத்தில் நம்பிக்கை கொண்டு சிவவழிபாட்டில் நம்பிக்கை கொண்டு நாட்டை ஆண்டுகொண்டு பல நாடுகளையும் ஆண்டது போலவே ஐரோப்பியர்களும் தங்களுடைய கிறித்தவ சமயத்துக்கு முதல்மரியாதை கொடுத்து ஆண்டவனிடத்தில் நம்பிக்கை வைத்து சமயபோதகர்களுக்கும் சமய வழிபாட்டுக்கும் முதல் மரியாதை கொடுத்தே தமது நாட்டையும் ஆண்டு பிறநாடுகளையும் ஆண்டார்கள்.

தமிழர்களின் பாரம்பரிய சமயமான சைவசமயத்தை கைவிட்டதனால் பலமிழந்த இனமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றது. அன்னியச் சமயங்கள் தாராளமாக உட்புகுந்து மேலும் மேலும் இனத்தைப் பலவீனமடையச் செய்கின்றன. கல்விமான்கள் அதிகம் பேர் இருந்தும் "கற்றதனால் ஆய பயனென் கொல் வாலறிவன் நற்றாழ் தொழார் எனின்" என்று திருக்குறளின் முதல் அதிகாரமான கடவுள் வாழ்த்தில் வரும் குறளைப் போல் இன்றைய தமிழ் இனத்தில் சைவத்தை மதியாத கற்றவர்கள் இருந்தும் என்ன பயன்?

கடவுள் வாழ்த்து எப்போதும் முதன்மையாக இருக்க வேண்டும். கடவுளைத் தமிழால் வாழ்த்துகின்றபோது தமிழ் புனிதமாகின்றது. இதை விடுத்துத் தமிழ்த்தாய் வாழ்த்தை நடைமுறைப் படுத்திக்கொண்டிருப்போரால் இனத்துக்கு என்ன பயன்? சமயத்தை விட்டு மொழிக்கு முதல்மரியாதை கொடுப்பது சிவனை விட்டு சக்திக்கு முதல்மரியாதை கொடுப்பதைப் போன்றது. தமிழை முதன்மைப்படுத்தி நடாத்திய அரசியல் செயல்பாடுகள் எல்லாம் விளைந்தும் வீடுவந்து சேராத கதையாகிப் போய்விட்டது. சக்தி சிவனோடு சேருவதற்காகவே 21 நாட்கள் கேதாரநாதர் விரதம் இருந்தாள், கன்னியாகுமரியில் ஒற்றைக்காலில் தவம் இருந்தாள், காஞ்சிபுரத்தில் மாமரத்தினடியில் சிவனை நினைந்து தவம் இருந்த இடமே ஏகாம்பரேஸ்வரர் ஆலயம். பல தடவைகள் சிவனை நினைந்து தவம் இருந்திருக்கிறாள் அம்மன்.

சிவனை விட அம்மனை மேன்மைப் படுத்துவதும், சைவத்தை விட தமிழுக்கு முதல் மரியாதை கொடுப்பதும் தவறு. சிவனோடு சேர்ந்திருந்தால்தான் அவள் சக்தி. சிவனை விட்டுப் பிரிந்தகாலங்களில் எல்லாம் அவள் இழந்த சக்தியைப் பெறுவதற்காக தவம் இருந்து சிவனை அடைந்து சக்தி எனும் ஸ்தானத்தை அடைந்திருக்கின்றாள். அதேபோலத்தான் சைவத்தை இழந்து நிற்கும் தமிழ் இனம் பலவீனப்பட்ட இனமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆடு இரைமீட்பதுபோல் சற்று அசைபோட்டு பழைய சரித்திரத்தை மீட்டுப் பார்க்க வேண்டும். சைவநீதியை அரசர்களும் மக்களும் பின்பற்றிய காலங்களில் தமிழர்கள் சுதந்திரமாக நாட்டை ஆண்டிருக்கின்றார்கள். புறச் சமயங்கள் தமிழர்களுக்கிடையே உள் நுழையும் போது சைவநீதி கைவிடப்பட்டு அன்னியர்களுக்கு அடிமையானார்கள்.

எல்லாச் சமயங்களும் ஆண்டவனை வேறு வேறு பெயர்களால் வழிபடுகின்றார்கள். சைவமக்களாகிய நாங்கள் சிவன் என்று வழிபடுகின்றோம். எல்லாச் சமயங்களையும் விட இறைவனையும் இறைவியையும் சேர்த்து வழிபடுகின்ற மிக அற்புதமான முறை சைவசமயத்தில்தான் உண்டு. சிவன் சக்தி தத்துவம் என்பது மிக மிக ஆழமானது. சைவ சமயம் மிக ஆழமானதும் அர்த்தமுள்ளதும். இறைவனாகிய சிவனை வழிபடுகின்றபோது சக்தியாகிய இறைவி சிவனோடு சேர்ந்து இருந்தே அடியவர்களுக்கு அருள்பாலிக்கின்றாள். இந்த உண்மையை அறியாதோரே அம்மனை மூலஸ்தானத்தில் வைத்து சிவனை அடுத்ததாக சிறுதெய்வத்தைப் போல் வைத்து முறையற்ற ஆலயங்கள் கட்டி மக்களை வழிபடச் செய்கின்றார்கள். இது சைவநீதிக்குப் புறம்பானதும் முறையற்றதுமாகும்.

தற்காலத்தில் உருவாகிவரும் சிறு தெய்வங்களின் ஆலயங்களில் முழுமுதற் கடவுளாகிய சிவனை சிறுதெய்வமாக வைக்கப்பட்டு வருகின்றது, இந்தக் குழப்பமான முறையால் அங்கு வழிபடும் மக்களின் குடும்பங்களிலும் குழப்பம் ஏற்படுவதோடு அன்பு இல்லாத நிலை உருவாகும். இன ஒற்றுமை சீர்குலையும். சைவ நீதியை ஆகமம் என்று சொல்லப்படும். ஆகமம் ஆகி நிற்பவனை முறைதவறி வைத்து வணங்கக் கூடாது. முழுமுதற் கடவுளாகிய சிவனுக்கு மூலஸ்தானமன்றி பக்கத் தானமோ பரிவாரத்தானமோ கிடையாது.

சகல தெய்வங்களும் போற்றி வணங்குகின்ற சிவபெருமானை வணங்கி மேன்நிலை அடையும் வாய்ப்பினைக் கொண்டவர்கள் சைவமக்கள். சிவ விரதமே விரதங்களில் உத்தமமானது, சிவாலய தரிசனம் கோடி புண்ணியம் தரவல்லது, சிவ மந்திரம் தீய வினைகளை அழிக்கக் கூடியது. சிவ மந்திரத்தை ஒரு தடவை சொன்னாலே வேதமந்திரங்கள் முழுவதையும் சொன்ன பலன் ஏற்படுகிறது. வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது நாதன் நாமம் நமசிவாயவே என்று திருஞான சம்பந்தப் பெருமான் பாடியுள்ளார். சிவாய நம எனச் சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை என்று பாடியுள்ளார் ஔவையார். சிவமந்திரத்தை பலர் கூடிச் சொல்லுகின்றபோது எத்தனையோ யாகங்கள் செய்த பலன் கிடைக்கின்றது.

**'சிவ சிவ என்கிலர் தீவினையாளர்**
**சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவ சிவ என்றிடத் தேவருமாவர்**
**சிவ சிவ என்னச் சிவகதிதானே"** எனத் திருமூலர் திருமந்திரத்தில் பாடியுள்ளார். தேவர்களைப் போன்று வாழவேண்டியவர்கள் தமிழ் மக்கள். ஆனால் இன்று அசுரகுணம் தலைவிரித்தாடுகின்றது. என்ன காரணம்? இஸ்லாமியர் வடநாட்டை ஆண்டபோது இந்தி பேசும் மக்களை இந்துக்கள் என்று அழைத்தார்கள், ஆங்கிலேயர் தென்நாட்டையும் கைப்பற்றி அங்குள்ள எல்லா இனத்தவர்களையும் இந்துக்கள் என்றும் எல்லோருடைய மதமும் இந்து மதம் என்று சட்டம் போட்டு விட்ார்கள். இந்தி பேசும் இனத்தவர்தான் இந்துக்களே தவிர இந்து என்பது சமயமே அல்ல. தங்களுடைய சமயம் சைவம் என்று பெருமைப்பட வேண்டிய தமிழர் தாங்களை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்வது என்பது இக்காலத்தில் மிகவும் வெட்கப்படவேண்டிய விடயமே.

சைவத்தின் மகிமையையும் பெருமையையும் அறியாதோர் படித்தும் பயனில்லை. "நமசிவாய வாழ்க" "நாதன் தாழ் வாழ்க" சைவநீதி வளர அன்பும் இன்பமும் தானாக வளரும்!




# PEACE OF MIND

Once a Saint was walking from one town to another town with a few of his followers. This was in the initial days. While they were travelling, they happened to pass a lake. They stopped there and the Saint told one of his disciples,

"I am thirsty. Do get me some water from that lake there."

The disciple walked up to the lake. When he reached it, he noticed that right at that moment, a bullock cart started crossing through the lake. As a result, the water became very muddy, very turbid. The disciple thought,

"How can I give this muddy water to his Saint to drink!"

So he came back and told the Saint,

"The water in there is very muddy. I don´t think it is fit to drink."

After about half an hour, again Saint asked the same disciple to go back to the lake and get him som e water to drink. The disciple obediently went back to the lake.

This time too he found that the lake was muddy. He returned and informed the Saint about the same. After sometime, again Saint asked the same disciple to go back.

The disciple reached the lake to find the lake absolutely clean and clear with pure water in it. The mud had settled down and the water above it looked fit to be had. So he collected some water in a pot and brought it to Saint.

Saint looked at the water, and then he looked up at the disciple and said," See what you did to make the water clean. You let it be.... and the mud settled down on its own - and you got clear water. Your mind is also like that! When it is disturbed, just let it be. Give it a little time. It will settle down on its own. You don´t have to put in any effort to calm it down. It will happen. It is effortless."

What did Saint emphasize here? He said, "It is effortless." Having `Peace of Mind´ is not a strenuous job; it is an effortless process!

In life everything goes on.................Keep Going.
Have a peaceful Life!
KEEP SMILING...........................not because of something, but in spite of everything.

Compiled by: P.Pathmanathan




# அபிநயாலயா நாட்டியாலயம்

# Abinayalaya Natyalayam

## Academy of Indian Clasical Dance



ஆசிரியை ஆடல்கலைமணி

ஸ்ரீமதி. றஜனி செல்வப்பிரகாசம்

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்

Markham and Painted post,

Markham and Steel & Ajex.

**Smt Rajani Selvapragasam**

**416- 320- 2913**

# சமுதாயமும் இனவாதமும்

## - த.சிவபாலு எம்.ஏ. -

அமெரிக்க உலக சந்தையின் 'கோபுரங்கள்', 'பென்ரகன்' என்பன தாக்கப்பட்டதன் விளைவாக இனத்துவேச உணர்வுகள் அமெரிக்காவிலும், கனடாவிலும் அதிகரித்துள்ளமையை இங்கு இடம்பெற்ற பல நிகழ்வுகள் வெளிக்கொண்டுவருகின்றன. சமூகங்களுக்கும் நாடுகளுக்கும் இடையேயான போராட்டங்கள் இனவாத அடிப்படையைக் கொண்டவையாகவே அமைகின்றன. இன ஒதுக்கல், அடக்குமுறை, ஒடுக்குமுறை என்பனவற்றிற்கு எதிராக மக்கள் விழிப்புப் பெறும் போது அது போராட்டமாக மாறுவது தவிர்க்க முடியாததே என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. நவீன குடியேற்றவாதம், மேலாண்மை வாதத்தின் அடிப்படையில் மனித எண்ணங்கள் இன்று இடம்பெறுவது தடுக்கப்படவோ அன்றித் தவிர்கமுடியாததாகவோ உள்ளது.

உலகின் பலபாகங்களிலும் இனவாதத்தின் அரக்கத்தன்மைக்குச் சாவுமணிகட்டவேண்டும் என்னும் நோக்குடன் பல நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. உலகை ஆட்டிப்படைத்த இனத்துவேசம் கொண்ட கிட்லர் அணியின் பாசிஸ சித்தாந்தத்தை அடியோடு களையவேண்டும் என்னும் நோக்கம் இரண்டாம் உலக யுத்தத்தின் பயனாக 1945ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மனித உரிமைகள் பட்டயம், ஐக்கிய நாடுகள் அமையத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு உலகில் உள்ள நாடுகள் அனைத்தாலும் பின்பற்றப்படல்வேண்டும் என்னும் நோக்கமும் முன்வைக்கப்பட்டது. "உறுபசியும் ஓவாப்பிணியும் செரு பகையும் சேராதியல்வது நாடு'' என்னும் தமிழர் பண்பாட்டிற்கேற்ப 'நாடா வளர்வது நாடகும்' என்பதனைத் தாரகமந்திரமாக ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைந்த மனித உரிமைகள் பட்டயத்தின் முதலாவத சரத்தின் வாசகம் பின்வருமாறு கூறுகின்றது:

"Discrimination between human beings on the ground of race, colour, or ethnic origin is an offence to human dignity and shall be condemned as a denial of the principles of the Charter of the United Nations, as a violation of the human rights and fundamental freedoms proclaimed in the Universal Declaration of Human Rights as an obstacle to friendly and security among nations"

மனித உரிமைகள் பட்டயம் 52 ஆண்டுகள் கடந்த நிலையிலும் 'பழய குறுடி கதவைத்திறவடி' என்னும் நோக்கில் நாம் மனித உரிமையைப் பாதுகாக்கவேண்டும் என்னும் கோசத்தை கைவிடாதவர்களாக மேலும் இறுகப்பற்றிப்பிடிக்கவேண்டிய தேவையை உணரமுடிகின்றது. குறிப்பாக இனத்துவேசம், வகுப்புவாதம், இன மேலாண்மைத்துவம் என்பன தொழில் நிலையங்கள் - தொழிற்சாலைகள், உணவகங்கள், அலுவலகங்கள்- பொது இடங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் தனது விசுவ ரூபத்தை, கோரப்பற்களைக் காட்டுகின்றது எனின் மிகையாகாது. கிட்லரின் பாசிஸ பட்டடைக்குள் சிக்கித் தவித்த யூத இனத்தினர் தம் நிலையை மறந்து அமெரிக்காவின் செல்லப்பிள்ளைகளாகத் திகழ்ந்து கொண்டு, கிட்லர் செய்த அதே தவறைச் செய்பவர்களாக பாலஸ்தீனர் மீது தமது மேலாண்மையை, அராஜகத்தைக் கட்டவிழ்த்து விடுவதனை யாரும் தட்டிக்கேட்காத நிலையில் செயல்படுவது எந்த வகையில் நியாயமானது? என்ற கேள்வி சிந்தனையாற்றல் உள்ள நடுநிலையான ஒவ்வொருவரிடமும் எழக்கூடிய கேள்வியே. ஆனால் உலக பொலீஸ்காரனாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ள அமெரிக்கா இஸ்ரேலயரது அடாவடித்தனத்திற்கு உதவியும் உற்சாகமும் கொடுத்து வருவது பேராபாயத்தைத் தோற்றுவிக்கக்கூடிய ஒரு நிலையை உலகில் தோற்றுவிக்கும் என்பதில் வியப்பில்லை.

உலக வல்லரசாம் ஐக்கிய அமெரிக்கா தனது தாய் நாடாம் பிரித்தனின் தோழமையோடு உலகின் சண்டியனாக, கொண்டதே எண்ணம், வைத்ததே சட்டம் என்னும் நிலையில் அடங்காத்தனத்துடன் தனது செல்வத்தைப் பெருக்கிக்கொள்வதற்காக எங்கெங்கு என்னென்ன வளங்கள் காணப்படுகின்றனவோ அவற்றைத் தாம் பெறமுனைகின்றது அல்லது முடியாத நிலையில் அவற்றை அழித்து அந்த நாடுகளின் பொருளாதார வளத்தைச் சிதைத்து வருகின்றது. எடுத்துக்காட்டாக யூகோஸ்லேவியாவில் நடந்த அனர்த்தத்தைம் ஒரு பின்லாடனையும் அவனது சகாக்களையும் பிடிக்கப்போவதாகக் கூறி ஆப்கான் நாட்டையும் அழித்தமையும், சிலி நாட்டில் காணப்படும் வளத்தைச் சுரண்டிக்கொள்வதற்காக அந்தநாட்டின் அதிபரையே படுகொலை செய்தமையும் வரலாற்றில் பதிந்துவிட்ட உண்மைகள்.

ஆபிரிக்கக் கண்டத்தில் றுவண்டா, தன்சானியா போன்ற நாடு களில் இடம்பெற்ற இனமோதல்களினால் பெருந்தொகையாக ஈவிரக்கமின்றிப் படுகொலைசெய்யப்பட்ட மனித உயிர்கள் இந்த உலகத்தின் சண்டியர்களின் கண்களில் படாமல் விட்டதற்கு அங்கு பொரு ளாதார வளமின்னையே காரணம் எனலாம். அவையெல்லாம் மனித உரிமை மீறலோ இனத்துவ படு கொலையாகவோ அமரிக்கா கொள்ள முன்வராதது விந்தையே. ஆமெரிக்காவின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு என்ன அட்டூழியங்களைச்செய்தாலும் செவியாய்த்து உற்சாகமூட்டி வருகின்றது இன்றய புஸ் நிருவாகம் என்றால் உலகில் சமாதானத்திற்கும் நீதிக்கும் ஜனநாயகத்திற்கும் நாம் போராடுகின் றோம் என்று போர்முரசு கொட்டுகின்றது அமெரிக்கா. ஸ்ரேலியர்களது எச்சசொச்சங்கள் அவர்களுக்கு எதிராகப் போராடியோர், பாதிப்புக்குட்பட்டோர் எல்லாம் இன்று இனவாதத்தின் உச்சியில் இருந்து அராஜகம் செய்வதை யாரும் தட்டிக்கேட்க முடியாதவர்களாக இருக்கும் மக்கள் உலகின் பல பாகங்களிலும் அவதிப்படுவதனைக் கண்டு மனம்வேதனை கொள்வதனை விட வேறு என்னதான் செய்யமுடியும் என்பது பலரது மட்டுமல்ல பல நாட்டு அரசுகளினதும் ஆதங்கமாக இருந்துவருகிறது. தட்டிக்கேட்க ஆள் இல்லையானால் தம்பி தண்டப்பிரதண்டம் என்பதுபோன்று இன்று உலகில் நிலைமை மோசமடைந்து வருகிறது. அமெரிக் ஏகாதிபத்திய சண்டியனின் அடாவடித்தனத்தை யாரும் தட்டிக்கேட்க முடியாத நிலையில் அதுவும் சாடிக்கேற்ற மூடியாக தந்தையின் வழியில் தனயன் என வந்து விட்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோஜ் புஸ் போராட்டம்தான் தீர்வு என்ற கொள்கையை முன் வைத்து மக்களைக் கொன்று குவித்து வருவது மட்டுமல்ல சீனாவில் ஜனநாயகம், இல்லை ரஸ்யாவில் ஜனநாயகம் இல்லை அங்கு மனித உரிமைகள் பின்பற்றப்படுவதில்லை எனப்பிதற்றிக்கொண்டு உல கின் பலபாகங்களிலும் தமது அராஜகத்தைக் கட்டவிழ்த்து விடுகின்ற நிலையைக் காணமுடிகின்றது. அதனிலும் அமெரிக்கச் சிறைகளில் அமெரிக்க இளைஞர்கள் படும் சித்திரவதைகளை யாரும் தட்டிக்கேட்கமுடியாத அளவிற்கு கேவலமானவையாக இருக்கின்றன.

இன்று எந்தவித ஈவிரக்கமுமின்றி ஆப்கான் மக்களைக் கொலைசெய்வதோடு கைப் பற்றப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகின்ற ஆப்கான் அரசுக்கு விசுவாசமாக இருந்த அல்லது ஆப் கானிய போர்வீரர்களை தங்களது இரும்புத்திரை மறைவில் வைத்துள்ள கியூபாவின் இராணுவ தளத் திற்குக் கொண்டு செல்லப்பட்டுச் சித்திரைவதை செய்யப்படுகின்றார்கள். இதுதான் அமெரிக்கா கடைப்பிடிக்கும் கடைப்புளித்தனமான ஜனநாயகம், மனித தர்மம். 'ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி' என்பதாகத்தான் உள்ளது அமெரிக்கா மேற்கொள்ளும் நடவடிக்கைகள். இதற்கு ஒத்து ஊதுகின்ற ஊதுகுழலாக ஜனநாயகத்தின் ஆணிவேர் என்று பெருமைப்பட்டுக்கொள்ளும் பெரியபிரித்தனின் பிரதம அமைச்சர் ஜோனி பிளையரின் செயல் வேடிக்கையானதாகவும், விளையாட்டுத்தனமானதாகவும் காணப் படுகின்றது. விரும்பியோ விரும்பாமலோ கனடாவும் அமெரிக்காவின் செயல்கள், சொற்களுக்கு ஆமா போடும் ஆசாமியாக இருந்து வருகிறது என்பது கனடிய விவகாரங்களைப் பார்க்கும் போது புலனாகும். நாங்கள் போராடமாட்டோம், எமது போர்வீரர்கள் நடுநிலையாளர்களாக அமைதி காக்கத்தான் போகிறார்கள் என்று சொன்ன கனடிய பாதுகாப்பு அமைச்சர் அங்கு கனடிய போர்வீரர்கள் தலிபான் அரசாங்கத்தின் இராணுவச் சிப்பாய்களை அதுவும் ஆயதங்களைக் கைவிட்டுச் சரணடைந்தவர்களை அமெரிக்க இராணுவத்திடம் கையளிக்கும் கையாலாகாத்தனத்தை மூடிமறைக்க முனைந்து பாராளுமன்றத்திற்கு உள்ளே ஒரு கதையும் வெளியே இன்னொரு கதையும் சொல்லிக் கொண்டு தடம் புரண்டு முன்னுக்குப் பின் முரணாகப் பேசியதை எதிர்க்கட்சிகளும் பத்திரிகைகளும் நன்றாகப் பதம்பார்த்ததையும் மறந்து இன்று பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுகின்றோம் என்று பிதற்றுவது எவ்வளவுக்கு நியாயமானது. மக்கள் இதற்கு விருப்புத் தெரிவித்தார்களா அல்லது ஜனநாயக தார்மீக அடிப்படையில் எடுக்கப் பட்ட முடிவா என்பதைத் தெளிவுபடுத்துவார்களா? அல்லது மனித உரிமை மீறல் என்பதனை அவர்கள் ஒப்புக்கொள்வார்களா?

பின்லேடன் கும்பல் செய்த செயலுக்கு உலகில் உள்ள அத்தனை முஸ்லிம்களும் காரணிகளா? அல்லது அமெரிக்காவின் 'எண்ணை வள நாடுகளை அடிமைப்படுத்த வேண்டும்' என்னும் ஏகாதிபத் தியக் கொள்கையின் பிரதிபலிப்பா? இன்றைய உலகின் முடுக்கிவிடப்பட்டுள்ள பயங்கரவாதப் பூஞ்சாட்டி காட்டும் செயல் கேவலம் ஒரு பின்லாடனைக் கண்டுபிடிக்கமுடியாத இந்த புஸ்சின் இராணுவம், இன்று ஈராக் மீது போரைக் கட்டவிழ்க்கத் துடிதுடித்துக் கொண்டு இருக்கின்றது.

தனது செல்வாக்கின் உச்சம் சரிந்து வருவதைப் புலனாய்வுத்துறைமூலம் அறிந்து கொண்டு அவர்களின் ஆலோசனையின் பேரில் புதிய ஒரு புரளியைக் கிழப்பிக்கொண்டு முன்னரே தடைகளை வலிந்து உத்தரவிட வைத்து நைய்ந்து போய் இருக்கின்ற, நலிந்து அன்றாடம் வாழ்க்கைக்கே சிரமப்பட்டு வாடிப்போய் இருக்கின்ற ஈராக்கிய மக்களின்மீது போர் தொடுக்க முரசம் முளங்குகின்றார் அதிபர் புஸ் என்றால் அதற்கு முன்னுக்குப்பின் முரணான வாதங்களையும் அப்பட்டமான பொய்களையும் துணிந்து சொல்லிவருவது பரிகசிக்கத்தக்கதே. ஈராக் மீதான போருக்கான முஸ்தீபு புஸ் அரசின் கபடநாடகம் எண்ணை வளத்தைச் சுரண்டத்தான் என பலநாடுகள் ஒப்புக்கொண்டுள்ள போதிலும் அமெரிக்காவை எதிர்த்து நிற்க பயந்து மௌனம் சாதிக்கும் நிலை தொடர்ந்தும் நீடிக்காது என்பது வரலாற்றைச் சற்றுப் புரட்டிப் பார்த்தால் புலனாகும். ஊலகின் எந்த நாடாகிலும் தான் சொல்வதைத்தான் கேட்கவேண்டும், செய்வதைத்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்னும் எதேச்சாதிகாரப்போக்குக்கு உலகம் கட்டுப்படாத நிலை உருவாகும் போது அமெரிக்கா அதனை உணர்ந்து அதற்குரிய செலவை வட்டியும் நிலுவையுமாகச் சேர்த்துச் செலுத்தத்தான் போகின்றது என்பதனை உணரும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

கனடாவில் இந்துக் கோயில்களுக்குள் புகந்து அங்கிருந்த வழிபாட்டுத் திரு உருவங்களை உடைத்துத் துவம்சம் செய்த இனவாதக் கும்பலை அல்லது பள்ளிவாசல்களுக்குத் தீயிட்டுக் கொழுத்திய கும்பலை வைத்திருக்கும் கனடிய திருநாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவதில்லை உல கில் அதி உன்னத நாடு என்று எப்படித்தான் சொல்லமுடியும். இதுமட்டுமல்ல வேலைவாய்ப்புக்களை வழங்கும் பொது நிறுவனங்களே பச்சையாக இனவாதத்தைக் காட்டி நிற்கின்றன. வேலை வாய்ப்புக் கான நேர்முகப்பரீட்சைகளில் கூட கல்வித்தகமைக்கோ அல்லது நிபுணத்துவத்துக்கோ முக்கியத்துவம் கொடுக்காது தமக்குத் தெரிந்தவர்கள், இனத்தவர், தெரிந்தவர்களின் சிபார்சுகளின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படுவதனைப் பார்த்து சலித்துக்கொள்வதைவிட வேறு என்னதான் செய்யமுடியும்.

கனடாவில் சிலவேளைகளில் ஒருவரை வேலையில் இருந்து நீக்குவதற்கு சாதாரண முறைப் பாடுகள் அவருக்கு எதிராகக் கிடைத்துவிட்டாலே போதும் அவர்களை வேலையில் இருந்து நீக்கி விடு கின்ற தன்மை பல நிறுவனங்களிலும் காணமுடிகின்றது. பல வருடகால அனுபவம் வாய்ந்தவர்களின் சம்பளப்பணத்தின் தொகை அதிகரித்துச் சிலவேளைகளில் 14 அல்லது 15 டொலர்களுக்கு மேலாகச் சென்றுவிடுவதால் ஒருவரின் இடத்திற்கு இருவரை நியமிக்க முடியும் என்ற உள் எண்ணத்தோடு சம்பளம் கூட எடுப்பவர்களை வேலையில் இருந்து நீக்கி விடுகின்றதன்மையும் காணப்படுகின்றது. இதுவும் இனரீதியில் இடம்பெறுவதனைக்காணலாம்.

வைத்திய சாலைகளில் கூட அந்தந்த நாட்டு மொழிதெரியாதவர்கள் அநுபவிக்கும் சிரமங்கள் இனத்துவேசத்தின் பாதிப்புக்கள் எண்ணிலடங்கா. சில தாதிமார், அல்லது பராமரிப்பாளர் வெளிப் படையாகவே நீங்கள் உங்கள் நாடுகளுக்குப் போகவேண்டியதுதானே. இங்கு ஏன் வருகிறீர்கள் என்று பச்சை வகுப்புவாதத்தைக் கக்கி விடுகின்றதன்மையும், பாடசாலைகளில் கூட நிறமாணவர்கள் பாரபட்ச மாகக் கணிக்கப்படுவதோடு அவர்கள் தீண்டப்படாதவர்களாகவும், ஒன்றும் தெரியாத ஆறறிவற்றவர் களாகவும் கருதப்பட்டு நடாத்தப்படுவதனையும் அவதானிக்க முடிகின்றது.

பல தென்னாசிய நாட்டினர் இங்குவந்து வேலைவாய்ப்புக்களுக்காக விண்ணப்பித்து விட்டு நேர்முகப்பரீட்சைக்குப் போகும்போது அவர்களின் நிறத்தைப்பார்த்துவிட்டு அருவருப்பாக முகத்தைத் திருப்பிக்கொண்டு திருப்பி அனுப்புகின்ற நிலையும் இல்லாமல் இல்லை. இதற்கு மேலாக அமெரிக்கக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட பின்னர் வேலைக்கு அமர்த்தப்படுபவர்கள் அராபியர்களா? அல்லது ஸ்லாமியர் களா என்று பார்த்து நியமனம் கொடுக்கின்ற நிலைமையும் மனித உரிமை அத்துமீறலாக இடம்பெறு கின்றமையையும் அவதானிக்க முடிகின்றது.

தென் ஆசியாவைச் சேர்ந்த ஸ்லாமிய நண்பர் ஒருவர் தனது மகனின் பிறந்ததினத்தைக் கொண்டாடுமுகமாக அவரது பள்ளி நண்பர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார் ஆனால் ஒருவருமே வரவில்லை என்ற ஆதங்கத்தை அவர் சொன்னபோது பாடசாலையில், ஒன்றாகக்கல்வி கற்கும் மாணவர்களிடையே உள்ள இனத்துவ உணர்வுகள் எவ்விதம் உள்ளன என்பது வெளிப்படை. பல ஆசிரியைகள் அல்லது ஆசிரியர்கள் தாம் சார்ந்த வெள்ளை நிறத்தவருக்கு அதிக புள்ளிகளும், விருதுகளும் பாடசாலாயில் கொடுத்துக் கௌரவிப்பதும் மற்ற இனத்தவர்களை ஒதுக்கி விடுவதும் சர்வசாதாரணமே.

கனேடிய அரச திணைக்களங்களில்கூட ஆங்கிலேயர் அல்லாத வேற்று வெள்ளை நிறத்தைச் சேர்ந்தவர்களுக்குக் நியமனங்களில் அவர்கள் கல்வித்தகமை குறைந்தவர்களாக இருந்தாலும் கொடுக் கப்படுகின்றது. உண்மையான தகமை உடையவர்களைப் புறக்கணித்து ஒதுக்கிவிடுகின்ற தன்மையும் உண்டு.

ஸ்லாமியர்கள் குறிப்பாகப் பெண்கள் மொட்டாக்குப்போட்டுக் கொள்வதும், சீக்கிய இனத்து ஆண்கள் தலைப்பாகை சூடிக்கொள்வதும் அவர்களின் மத நம்பிக்கைகள், பண்பாடு சார்ந்த விடயங்கள் எனினும் இவற்றைத் தெரிந்திருந்தும் பலபாடசாலைகளில் இவற்றை அணியக்கூடாது என அதிபர்களும் ஆசிரியர்களும் அடம்பிடித்து அவர்களைப்பாடசாலையில் நின்றும் வெளியேற்றியுள்ளமை நாம் அறிந்ததே. இவ்வித அம்சங்கள் செப்ரம்பர் 11க்குப் பின்னர் அதிகரித்துள்ளது. இதற்கு அவர்கள் கூரிய ஆயதங்களைக் கொண்டு வரலாம் என்னும் வாதத்தை அவர்கள் காரணமாக முன் வைத்திருந்தனர். உண்மையில் ஆயதங்களைக் கொண்டு வருவபர்கள் யார் எந்த இனத்தினப் பிள்ளைகளினால் பாடசாலைகளில் கொலைகள் நடந்தன என்பதற்கு பல ஆதாரங்கள் உள. ஆனால் இவற்றை மறந்து அல்லது மூடி மறைத்துக்கொண்டு இனத்துவேசம் கொண்டவர்களால் இவ்வித பாரபட்சம் காட்டப்படுகின்றது.

இரண்டாவது உலக யுத்தத்தின் அனர்த்தத்திற்கு உள்ளாகிய நாடுகளில் ஒன்றான பிரான்ஸ் மக்கள் தமது வரலாற்றை மறந்து இன்று லூபென் என்னும் துவேசியின் பின் அணிதிரண்டு இனவாத அரசியலை அங்கு குடியேறி அந்த நாட்டின் செல்வச் செழிப்புக்காக உழைத்து வரும் ஆசிய, அபிரிக்க, அரேபிய மக்கள் மீது கட்டவிழ்த்து விடுவது இனவாதத்தின் எழுச்சிக்கான அல்லது மனித உரிமைகள் பட்டயத்திற்கு எதிராக அடிக்கப்படும் சாவுமணி என்றே கொள்ளக்கிடக்கின்றது.

இன்று பாலஸ்தீனியர் மீது பயங்கரவாத முலாம் பூசப்பட்டு அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் புஸ்சின் செல்லப்பிள்ளையான இஸ்ரேல் பலஸ்தீனியர்களை ஈவிரக்கிமின்றிக் கொன்று குவித்து வருகின்றது. ஐ.நா. வினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தைக்கூட உதாசீனம் செய்து தான் நினைத்ததை நிறைவேற்ற பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு எருசலேமிலுள்ள யேசுநாதர் அவதரித்த திருத்தலத்துக்குள்ளேயே புகுந்து அடாவடித்தனம் செய்வது எந்தவகையில் நியாயமானது நீதியானது என்பதனைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்களே ஒழிய அதனை தடுத்து நிறுத்துவதற்கு ஏதும் செய்யாமல் வாழாவிருப்பது விந்தையாக உள்ளது.

இந்த உலகச்சண்டியர்கள் கொறியப் பிரச்சினைக்கு முகங்கொடுக்க பின்நிற்பதற்கு அங்கு வடகொரியாவிற்குப் பக்கபலமாக சீனா நிற்பதும் வட வியட்நாமில் பட்ட அவலத்தை மீண்டும் பெற்றுக்கொள்ளப் பயப்படுவதும் காரணிகளாக இருக்க ஈராக் மீது தனது காடைத்தனத்தைக் கட்டவிழ்த்துவிட அங்குள்ள எண்ணை வளத்தைச் சுரண்ட முற்படுவதே நோக்கமாகவுள்ளது என்பது வெளிப்படை.

உலகின் பெரிய சண்டியனுக்கு எதிராக யாரும் வாய்திறக்க அஞ்சுவதனையே இது எடுத்துக்காட்டு கின்றது. காத்திரமான பங்களிப்பினை மேற்கொள்ளும் இன்றியமையாத கட்டாயத்தேவை இன்று உலகுக்கு உள்ளது. இஸ்ரேல் செய்யும் அடாவடித்தனத்தைக் தட்டி நிறுத்தவேண்டிய தேவை எல்லா உலக நாடுகளுக்கும் உண்டு என்பதனை யாரும் மறுக்க முடியாது. சண்டியன் பிளையைச் சரி என்று சொன்னால் அதனை எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் நிலைமையே இன்று உள்ளது. இந்நிலைமை எப்போ மாறுகின்றதோ அப்போதுதான் உலகின் சமத்துவம், சமாதானம், நீதி நிலவும் இல்லையேல் வலியாரை மெலியார் வதைக்கும் நிலையே தொடரும்.

நீதிக்கும் சமத்துவத்திற்கும் அமைதிக்கும் மேற்குலகை நாடிவந்துள்ள ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க மக்களை விரட்டி ஒதுக்குகின்ற போக்குக்கள் அண்மைக்காலங்களில் பல நாடுகளிலும் வளர்ச்சியடைந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. யேர்மன், பிரான்ஸ், இத்தாலி, பெரிய பிரித்தா னியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் இவற்றின் தோற்றமும் எழுச்சியும் ஆழ்ந்து சிந்திக்கத்தூண்டுவதோடு இதற்கு எதிராக மக்கள் அணிதிரண்டு போராட வேண்டிய நிலைமையும் எம் எதிரே உண்டு.

*All your financial needs for your family protection*

*Please Call* **Jeeva Samithamby**

**416-294-4855**

| | |
|---|---|
| Life Insurance | ஆயட்காப்புறுதி |
| Term Insurance | தவனைக்காப்புறுதி |
| Mortgage Insurance | வீட்டு அடமான காப்புறுதி |
| Non-medical Insurance | மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி |
| Critical illness Insurance (Tax free lump sum payment) | கொடிய நோய்களினால் பாதிப்புறும் போது மொத்த தொகையும் கிடைக்கும் |
| Disability Insurance (Income protection monthly or daily benefit) | சுகயீனம் அடையும் போது வருமான இழப்பீடு |
| Health Benefit Insurance | மருத்துவ உதவி திட்ட காப்புறுதி |
| Travel & Visitors Insurance | வீடுமுறை & பிரயாணக் காப்புறுதி |
| R.R.S.P Loan & Investment (In segregated funds) | ஓய்வுதிய சேமிப்புத்திட்டம் |
| RESP for your kid's education | உங்கள் குழந்தைகளின் எதிர்கால கல்விக்கான சேமிப்புத்திட்டம் |

**இவைகளை 10 திற்கு மேற்பட்ட முன்னணி நிறுவனங்ளகின் மூலம் பதிவு செய்து தருகிறார்**

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்**

**ஜீவா சாமித்தம்பி 416-294-4855**

RBC Insurance | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Equitable Life of Canada | AIG | Manulife Financial | AXA FINANCIAL PROTECTION | Empire Life | Canada Life | STANDARD LIFE



Jeeva Samithamby
Broker
416-294-4855

# Remedy'sRx Arogya Pharmacy

**5200 FINCH AVE EAST #111, SCARBOROUGH, M1S 4Z4**

## Remedy'sRx ஆரோக்யா பார்மசி

FINCH & MIDDLEFIELD சந்திப்பில்

**Tel: 416. 840. 0007 Fax: 416.840.0008**

**"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"**

- என்பது திருக்குறள்

**தமிழர் மத்தியில் தமிழ் மருந்தாளரின் புதிய மருந்தகம்:
Remedy'sRx ஆரோக்யா பார்மசி**

- நீங்கள் உபயோகிக்கும் மருந்துகள், அவற்றின் செயற்பாடுகள் பற்றியும், உங்கள் ஆரோக்கியம் சம்பந்தமான விபரங்கள் பற்றியும்,தெளிவான விளக்கங்களை என்னுடன் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கலந்துரையாடிப் பெற்றுக்கொள்ளலாம்.
- முதியோர் மற்றும் சமூகநல உதவியில் இருப்போரிடமிருந்து $ 2.00 அறவிடப்படமாட்டாது
- வயோதிபர்கள் மற்றும் உதவியற்றவர்கள் தாமே உபயோகிக்கும் வகையில் மருந்துகளை "COMPLIANCE or BLISTER PACKGING"செய்து கொடுக்கப்படும்.
- தங்களுக்குத் தேவையாயின் இலவச விநியோகமும் செய்து தருவோம்.
- மருந்தகத்தில் இரத்த அழுத்தம் சரிபார்க்கும் கருவியையும் இலவசமாக உபயோகிக்கலாம். (FREE BLOOD PRESSURE MONITOING)
- GLUCOMETER STRIPS வாங்கினால், GLUCOMETER இலவசமாக தருவோம். அத்துடன் உபயோகிக்கும் விதத்தினையும் தெளிவாக விளக்கிக் கூறுவோம்.
- மருந்துச் சீட்டின்றி பெற்றுக்கொள்ளக் கூடிய மருந்துகளை என்னுடன் தமிழில் கலந்தாலோசித்துப் பெற்றுக் கொள்ளலாம்..
- மருந்தக நேரம் முழுவதும் தமிழ் மருந்தாளரின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்:



வெ. கார்த்திகேயன் (கார்த்திக்)
மருந்தாளர்
(Pharmacist / Owner)
416-840-0007

விரைவான சேவை! நிறைவான சேவை!! தரமான சேவை!!!

**உங்கள் ஆரோக்கியமே எங்கள் நோக்கம்**

# வாழையடி வாழை-2008












# வீரர் ரேக் அவுட் & கேற்றரிங்

# VEERAR TAKE OUT & CATERING

## மாநகரில் மரக்கறி சாப்பாட்டின் மன்னர்

# வீரர்

- **Birthday**
- **Anniversary Parties**
- **Wedding**
- **Puberty & All special Events**

**போன்ற நிகழ்வுகளின் கேற்றரிங் தேவைகளுக்கு உடனே அழையுங்கள் வீரர் ரேக் அவுட்&கேற்றரிங்**








## தொடர்புகளுக்கு-அப்பன்

**(647)293-6634 / (416)299-4541**

**5790 Sheppard Avenue East., Unit-3**
**Scarborough, Ontario, M1B 5J7**


S.P.IMPORTERS
உங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களையும்
நியாயமான விலையில் ஒரே இடத்தில் வாங்கிட
Vegetables, Fruits, Fish, Meat
Srilankan, East & West Indian
groceries, Videos & Furniture.
S.P. IMPORTERS
எஸ்.பி. இம்போட்டர்ஸ்
Fresh Fish & Meat
2853 Lawrence Ave. East
Scarborough
416-261-4737
Furniture & Mattress
2859-2861 Lawrence Ave. East
Scarborough
416-266-3077
Grocery & Vegetables
2863 Lawrence Ave. East
Scarborough
416-261-3881
Video & Audio
2865 Lawrence Ave. East
Scarborough
416-261-3881




# உங்கள் சகல தேவைகளையும் நிறைவு செய்ய

*"Your One Stop Service Center"*

Full Service Shop

## Foreign • Domestic

## All Makes & Models

• Engines • Air Conditioning • Transmissions
• Radiators • Batteries • Brakes • Tune-Ups
• Clutches • Computer Diagnostics


JJM
CONSTRUCTOR
COMPLETE HOUSE RENOVATION & BASEMENTS
FREE ESTIMATE
Home - Office
Kitchen - Bathrooms
Ceramic - Hardwood
Carpet - Painting
Separate Entrance
Call: Jeya
Cell: 416-529-5508
Tel: 416-287-1834


IATA
SkyRoute
TRAVEL SERVICES INC.
TICO
1200 Markham Road, Suite 106
Toronto, Ontario, Canada, M1H 3C3
Tel: 416-439-4000 Ext.223
Fax: 416-439-6463
Toll Free: 1-877-Go To Sky
e-mail: jim@skyroutetravel.com
www.skyroutetravel.com
Jim Perumalpillai
Manager

# நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார்

## - இந்திரா பிரபாகரன் (B.A) -

இந்துசமுத்திரத்தின் நித்திலம் என்று அழைக்கப்படும் இலங்கைத்தீவின் வடமாகாணத்தில், யாழ்ப்பாணப்பதியில் நீர்வளமும், நிலவளமும் மிக்க நீர்வேலிப்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி யுள்ளவரே ஸ்ரீ அருள்மிக அரசகேசரிப் பிள்ளையார்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஆன்றோர் வாக்குக்கு இணங்க எம் கிராமத்தின் கண் ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலயமும் பழமையும், புதுமையும் உடையது. ஈழத்தின் தொன்மையான பன்னிரண்டு சைவ ஆலயங்களில் இதுவும் ஒன்றென வரலாற்று நூல்கள் சான்று பகரு கின்றன. இதன் பெருமை காரணமாகவே இலங்கை சைவசமய பதினொன்றாம் தரப்பாடப் புத்தகத்தில் தொன்மைமிக்க பிள்ளையார் ஆலயங்களில் நீர்வேலி அரசகேசரி விநாயகரும் இடம் பெறுகிறார். அதனை எல்லா மாணவர்களும் கற்று அறிந்து கொள்கின்றனர்.

இவ்வாலயத்தின் ஸ்தாபிதம் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ அல்லது 17ம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ அமையப்பட்டதென அறியப்படுகின்றது. மனிதனின் உணர்வலைகளை ஆன்மீகத்தின் பால் ஈடுபாடு கொள்ளச் செய்த முயற்சியின் ஒருபடியாக அமைவதே வழிபாடு ஆகும். மனம் வாக்கு முதலானவற்றுக்கு எட்டாதவரும் எல்லைப்படுத்த முடியாதவரும் குணம் குறி அற்றவருமாகிய இறை வனை எல்லைப்படுத்தி, குணம் குறிகளுக்கு உட்படுத்திக் கட்புலனுக்குத் தெரியும்படி அமைக்கப் படுவதே திருவுருவம் அத்தகைய சிறப்புடையது எம் பிள்ளையார் திருவுருவம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் இவ் நான்கும் ஒரு ஆலயத்தின் சிறப்பம்சமாகும். அந்த வகையில் தீர்த்தம் தானாகத் தோன்றியது. இத் தீர்த்தக் கிணற்றின் அமைப்பு, உருவம், ஆழம், நீரின் புனிதம் ஆகியவற்றைக் காணுவோர்கள் மற்றும் இத் தீர்த்தத்தினை அருந்துவோர் மிகவும் பிரமித்து நிற்பர்.

தமிழ் மன்னன் பரராசசேகரன் மைத்துனன் - மன்னன் பண்டாரத்தின் முதன் மந்திரி அரசகேசரிக்கும் இவ்வாலயத்திற்கு ஏதோ நெருங்கிய தொடர்பு இருந்ததாகவும் இதன் காரணமாகவே இவ்ஆலயம் "ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார்" என அழைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாலயத்தின் பரிபாலனம் ஆரம்பகாலத்தில் தனிப்பட்டவர்களாலும் 1949இல் சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட அறங்காவல் சபையினரிடம் ஒப்படைக்கப் பெற்று அன்று முதல் இன்று வரை காலத்திற்குக் காலம் தெரிவு செய்யப்படும் பரிபாலன சபையினரால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. ஆலயத்தின் பரிணாமவளர்ச்சிக்கு பரிபாலனசபையும், அடியார் கூட்டமும் பெரிதும் உதவுகின்றனர். உதாரணமாக முருகனது சித்திரத்தேர் அமைக்கப்பட்டமை, இராஜகோபுரம் அமைக்கப்பட்டமை, ஆலய புனர்நிர்மாண திருத்த வேலைகள், நந்தவனம் அமைத்தல் முதலியனவாகும்.

இவ்வாலயத்தின் மகோற்சவம் ஆண்டுதோறும் ஆவணிச்சதுர்த்தியன்று கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் பெருவிழாவாக நடைபெற்று பௌர்ணமி தினத்தில் தீர்த்தோற்சவத்துடன் இனிது நிறைவுபெறும். ஆலய பிரதம சிவாச்சாரியாராக சிவஸ்ரீ கார்த்திகேய சாம்பசதாசிவப் குருக்களின் புத்திரர்சிவஸ்ரீ சோமதேவக் குருக்களும் அவர் புத்திரர்களும் முப்பொழுதும் திருமேனி தீண்டி பக்தி சிரத்தையுடன் தொண்டாற்றி வருகின்றனர்.

இவ் அரசகேசரியின் புகழ் சொல்லில் அடங்காதன. அவன் புகழ் மென்மேலும் வளர எல்லாம் வல்ல இறைவனை வணங்குவோம்.

"அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி" அருள் பெறுவோமாக!

# N.K.S.DRAPERY & BLINDS LTD

**கனடாவில் தமிழர்கள் மத்தியில் முதன்முதலாக ஆரம்பித்த பெருமையும் பல்லின மக்களின் பாராட்டையும், பற்பல விருதுகளையும் பெற்ற ஒரே ஒரு தமிழர் நிறுவனம்**

**CUSTOME MADE**

* VERTICAL BLINDS
* VENETIAN BLINDS
* ROLLER BLINDS
* DRAPERIES
* CURTAINS
* SHUTTERS



**தொடர்புகளுக்கு: N.கேதா (KETH)**


**210 Silver Star Blvd, Unit #825**
**Scarborough, ON.**

**416-321-6420 or 416-738-3370**

# "சாகித்ய ரத்னா" கவிஞர் நீர்வை முருகையன் அவர்கள் பற்றிய ஓர் பார்வை

## செய் நேர்த்தியை முதன்மைப்படுத்திய ஓர் உன்னதமான படைப்பாளி முருகையன்

**- பேராசிரியர் சி. சிவசேகரம் -**



இலங்கைத் தமிழ் இலக்கியத்திற்குத் தனித்துவமான ஒரு அடையாளம் உண்டு என்பது பற்றித் தெளிவாக எடுத்துரைத்தோர் முற்போக்கு இலக்கிய இயக்கத்தினர். அதை வலியுறுத்திப் பேசியதோடு அதற்கு இந்த மண்ணிற் கூட மறுக்கப்பட்ட அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதற்கு முன்னோடிகளாக செயற்பட்டோருட் பேராசிரியர் கைலாசபதிக்கு முக்கியமான இடமிருந்தது.

அந்த அடையாளம் தனித்துவமானது மட்டுமல்ல. அது தரத்திலும் தமிழகத்திற்கு ஈடானதும் சில வகைகளில் உயர்வானதும் என்பதை 1950 களிலிருந்து வளர்ச்சிபெற்ற ஒரு கவிதைப் போக்கு உணர்த்தி நின்றது. அப் போக்கின் முதன்மையான ஒரு பிரதிநிதியாக நாம் முருகையனைக் கூறலாம்.

முருகையனின் கவிதையின் வீச்சையும் விருத்தியையும் சில முக்கியமான வகைகளிற் பாரதிதாசனுடைய கவிதைகளின் வலிமையான பண்புகளுடன் சேர்த்து நோக்கலாம். இருவரிடமும் ஆழமான மொழிப் பற்று இருந்தது. இருவரிடமும் இனப்பற்றும் சமூக நீதிக்கான வேட்கையும் அறம் பற்றிய உறுதிப்பாடும் இருந்தன. எனினும், இருவரது போக்குக்களும் அவர்கள் தமது கவித்துவத்தின் உச்சத்தை நோக்கிச் செல்கையிற் திசை பிரிந்தன.

பாரதிதாசனின் இனப்பற்றுத் தமிழரல்லாதோர் மீதான பகைமையாகவும் பின்னர் தீவிர இந்திய நாட்டுப் பற்றுக்கும் தமிழ்த் தேசியவாதத்திற்குஞ் சமநிலை காணுகிற ஒரு போக்காகவும் மாற்றங்கண்டது. பார்ப்பனிய விரோதத்தையும் பகுத்தறிவு வாதத்தையும் விட்டால் அவருடைய தொடக்கக்கால உணர்வுகளில் மற்றவை தீவிரமிழந்துவிட்டன எனலாம். தமிழகத்தின் திராவிட இயக்கத்தின் அரசியற் சீரழிவுச் சூழலில் அவர் தேர்ந்தெடுத்த தமிழ்த் தேசியவாதப் பாதை அவருக்கு கை கொடுக்கவில்லை.

முருகையனின் மொழிநடை வேறுபட்டது. ஆழமான உணர்வுகளையும் வெகு நிதானமான சொற்களின் மூலம் உணர்த்துகிற ஆற்றல் அவருக்கிருந்தது. அவருடைய தொடக்கக் காலக் கவிதைகளில் அவரது இளமை வேகமும் தமிழ்ப் பற்றும் இன உணர்வும் வெளிப்பட்டன. ஆனாலும், ஒரு உணர்ச்சிக் கவிஞராக அவை அவரை அடையாளப்படுத்த வில்லை. போராட்ட அழைப்பைக் கூடத் தோள் மீது கைபோட்டு அரவணைத்துச் செல்லுகிற விதமாகச் சொல்கிறவராகவே அவர் இருந்தார்.

முருகையனின் உலக நோக்கு அவருடைய உலக அனுபவத்தையொட்டியும் தமிழ்த் தேசியவாத அரசியலின் நேர்மையீனத்தையொட்டியும் படிப்படியான மாற்றங்களைக் கண்டது. மாக்சியப் பொருள் முதல் வாத நோக்கில் மாக்சிய இயங்கியலின் அடிப்படையில் அவர் உலகை நோக்கத் தொடங்கினார். அந்த நோக்கு அவரது மனித நேயத்தை மேலும் ஆழமாக்கியது சமூக நீதிக்கான வேட்கையை மேலும் அதிகப்படுத்தியது. குறுகிய தமிழ்த் தேசியவாதத்திற்கு பலியாகாமல் அவரால் முழுமையான ஒரு மனிதநேயவாதியாக விருத்தியடைய முடிந்தது.

அவரது சமூகப் பங்களிப்புகள் பல வேறு தளங்களிலும் பலவேறு விதங்களிலும் நிகழ்ந்துள்ளன. எந்தத் துறையிற் பணியாற்றிய போதும் முருகையன் தான் செய்யுங் காரியத்தைச் செய்நேர்த்தியுடனும் முழுமையான ஈடுபாட்டுடனும் செய்வதில் மிகுந்த நாட்டங் காட்டினார்.

தான் கூறுகிற கருத்துக்களிற் குழப்பத்திற்கும் தனது நோக்கத்திற்கு முரண்பாடான விளக்கங்கட்கும் இடம் இல்லாதிருக்குமாறு அவர் விசேடமான கவனஞ் செலுத்தினார்.

அவரது சிந்தனைத் தெளிவும் செய்நேர்த்தியும் அவரது சொற்பிரயோகத்திலும் தம்மை வெளிப்படுத்தின. மரபு செய்யுள் வடிவத்திலேயே அவருடைய கவிதைகள் அமைந்த போதிலும், எதுகை மோனைக்காகவோ பிற யாப்பு விதிகளை மீறப்படாது என்பதற்காகவோ சொற்களை வலிந்து திணிக்கிற போக்கு அவரிடம் இருந்ததில்லை. தமிழ்க் கவிதையுடனான பரிச்சயமும் பயிற்சியும் மொழியை ஆளும் வல்லமைக்கு வலுச் சேர்த்தன. சொற்களை தேடி அவர் செல்லாமற் சொற்கள் அவரைத் தேடி வந்தன. முருகையனுடைய கவிதைகளின் தெளிவையும் தர்க்க ரீதியான மொழிப் பயன்பாட்டையும் கருத்தாழத்தையும் வைத்து அவரை ஆய்வறிவுக் கவிஞர் என்றும் அவரது விஞ்ஞான அறிவை மனதிற் கொண்டு அவரது கவிதைகளில் விஞ்ஞானப் பண்பு உள்ளதாகவும் அகச்சார்பான கருத்துகள் கூறப்பட்டதுண்டு. அவை முருகையனையோ அவரது கவிதையையோ சரியாக அறியாதோரின் கூற்று. அறிய உதவாத கூற்றுக்களுங் கூட.

நல்ல கவிதைக்கு தெளிவான, கருத்து முரண்பாடற்ற மொழிப் பிரயோகம் கேடானதல்ல. அது கவிதைக்கு வலுச் சேர்க்கின்றது. கவிதையை உணர்ச்சிப் பிரவாகத்துடன் குழப்பிக் கொள்கிறவர்கள் தவறான முடிவுகளைச் சென்றடைகின்றனர். கவிதை என்பது பல்வேறுபட்ட வாசிப்புக்கட்கு இடமளிப்பது. ஆனால், அவ்வாசிப்புக்கள் ஒன்றுக்கொன்று முரண்படுவது கவித்துவத்தின் அடையாளமல்ல. அது கருத்துக் குழப்பத்தின் அடையாளமாகக் கூட இருக்கலாம். முருகையனுடைய கவிதைகளின் வேறுபட்ட வாசிப்புக்கள் பொதுவாக ஒன்றுக்கொன்று இசைவானவையாயும் ஒன்றை ஒன்று வலுப்படுத்துவனவாயும் அமையக் காரணம், மொழியின் பாவனை மீது அவர் இளமை தொட்டுக் காட்டிவந்த சிரத்தையாகும்.

முருகையனுடைய கவிதைகள் ஈழத்துத் தமிழ்க் கவிதை தனது உச்சங்களை எட்டிய காலப் பகுதியில் எழுதப்பட்டவை. ஈழத்துக் கவிதையை அதன் உச்சங்கட்குக் கொண்டு சென்றவற்றுள் அவரது கவிதைகளுக்கு ஒரு பெரும் பங்குண்டு. அவற்றின் சிறப்பை அறிந்ததனாலேயே பேராசிரியர் கைலாசபதி அவரைக் கவிஞர்கட்குக் கவிஞர் என்று கூற முற்பட்டார். அக்கூற்று இன்று வரையுங் கூட செல்லுபடியானது.

முருகையன் புதுக்கவிதையை ஒரு காலத்தில் முற்றாக நிராகரித்தவர். அதற்கான வலுவான காரணங்கள் இருந்தன. அவர் அவ்வாறு நிராகரித்த காலத்தில் வந்த புதுக் கவிதைகளில் முக்கியமாகத் தமிழகத்திற் கொண்டாடப்பட்டவற்றில், மரபுக் கவிதையின் யாப்பின் கட்டுப்பாடின்மை போகக், கவிதைக்குரிய அழகியற் பண்புகள் பல காணப்படாமை ஒரு முக்கிய காரணம். புதுமைப் பித்தனின் சொற்களைக் கடன் வாங்குவதானால், “கொட்டாவி விட்டதெல்லாம் கூறு தமிழ்ப் பாட்டாச்சே, முட்டாளே இன்னமுமா கவி” என்கிற விதமாகவே அவை பெரும்பாலும் அமைந்தன.

பின்னர் புதுக்கவிதை கூடிய செய்நேர்த்தியுடன் அமைந்துவரத் தொடங்கிய போது, முருகையன் புதுக் கவிதைகளை அக்கறையுடன் வாசித்துத் தரமானவையாகக் கண்டவற்றை மெச்சவுந் தவறவில்லை. ஆக்கமாக விமர்சித்த போதும் அவராற் புதுக்கவிதையில் ஆர்வத்துடன் ஈடுபட இயலவில்லை. ஏனெனில், மரபு சார்ந்த செய்யுள் வடிவங்களின் ஓசை நயம் அவருடன் இறுக்கமாக ஒன்றிப்போயிருந்தது.

தன்னுடைய ஆற்றல்களைக் கொண்டு சாதிக்க வேண்டியவை நிறையவே இருக்கையில், பரிசோதனை என்கிற பேரிற் பயனற்ற முயற்சிகளைச் செய்ய அவர் விரும்பவில்லை என்பதே அதன் காரணம் என்று கூறுவேன். ஏனெனிற், செய் நேர்த்தியை முதன்மைப்படுத்திய ஒரு உன்னதமான படைப்பாளி அவர்.

# K.K.CATERING

## தரமான அறுசுவை உணவுகள்







**You are about to taste a vast selection of authentic Sri Lankan cuisine, the way it's meantto be cooked with a variety of herbs and spices unique to Sri Lanka.**



**Tasty Sri Lankan & Indian Dishes for all your functions**

**PLEASE CONTACT PAUL**

**TEL: 416-287-3398  CELL: 647-891-9184**

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு


ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற பழமொழிக்கு அமைய எமது மக்கள் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டு தொடர்ந்தும் ஒற்றுமையாக உழைக்க வேண்டும். நீர்வேலி மக்கள் நலன்பேணும் முகமாக இச்சங்கத்தை ஆரம்பித்து 11ஆம் ஆண்டில் காலடி வைத்துக் கொண்டிருக்கிறோம். வாழையடி வாழை மலர் 3ஆம் ஆண்டு மலராக உங்கள் முன் வந்துள்ளது.

இம்மலர் மூலம் நான் கூறுவது, எமது மக்கள் எமது ஊரில் உள்ள பாடசாலைகள் எல்லாம் நன்றாக வசதியுடன் அமைந்து எங்கள் பாடசாலை மாணவர்கள் நன்றாகப் படிக்க நாம் எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும். இதைவிட்டு வேறு பாடசாலைகளுக்குச் சென்று படிப்பதை நிறுத்த வேண்டும். நமது ஊர் பெயர் சொல்லும் அளவுக்கு மாணவர்கள், பெற்றோர்கள் முன் வர வேண்டும்.

நீர்வேலிக்கு பெருமையை கொண்டு வந்த எமது கவிஞர் இராமுப்பிள்ளை முருகையன் அவர்கள் இறைவனடி சேர்ந்துள்ளார். அவரின் பெயரால் நீர்வேலிக்கும் பெருமை என்று சொல்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லோரும் பிரார்த்திப்போமாக.

ஞானேந்திரன் நமசிவாயம்
பொருளாளர்
நீர்வேலி நலன்புரிச் சங்கம் - கனடா





# ஊரோடு உறவாடும் உங்கள் நண்பன்



**Jay Nadarajah**
*Insurance Advisor*
**Direct: 416 558 2551**
Email: nadarajahj@gmail.com

- Critical Illness Insurance
- Disability Insurance
- Dental & Drugs Insurance
- Travel Insurance
- Non-Medical Insurance
- Mortgage Insurance
- Life Insurance Products
- RRSP'S & Investments
- RESP - Education Saving Plan
- Final Expense Products

**RESP**

- If you want to benefits from the government grant for this year
- We paid highest return last eleven years in a row

MEGA
Financial Group
**PH 28 - 4168 Finch Ave. E.**
**Scarborough ON. M1S 5H6**
Web: www.megafinancial.ca

INDUSTRIELLE ALLIANCE
Canada Life
Unity Life of Canada
Empire Financial Group
UL Mutual
TRANSAMERICA
Manulife Financial
RBC Insurance

# திருமணங்கள் முறிவடைவது ஏன்....

## - தங்கபாலு (எம். ஏ) -

திருமணம் என்பது இருமனம் ஒன்றாகக் கலந்து இவ்வுலகியல் வாழ்வில் வாழ்வாங்கு வாழத் தலைப்பட்ட கருத்தொருமித்த இருவர் ஒருங்கிணைந்து செயற்படும் மனையறமாம் நல்லறத்தில் ஈடுபட அடியெடுத்து வைக்கும் நாளைக் குறிக்கின்றது. ஒரு ஆணும் ஒருபெண்ணையும் திருமண ஒப்பந்தத்தால் இணையவைக்கும் ஒரு வைபமாக திருமணம் இடம்பெறுகின்றது. இத்திருமணமுறைகள் பலதரப்பட்டன. நாட்டிற்கு நாடு மதத்திற்கு மதம் காலத்திற்குக் கலாம் மாறுபட்ட முறைகளைக் கொண்டதாக திருமண முறைக் காணப்படுகின்றன. ஆண் பெண்ணுக்கிடையேயான இவ் ஒப்பந்தத்தை கலியானம், விவாகம், திருமணம் என்னும் வழக்கியல் சொற்கள் கூறுகின்றன எனினும் கலியாணம், விவாகம் என்பன வடமொழிச்சொற்களே.

இளமைத் துடிப்பும், இன்ப எண்ண அலைகளும் உள்ளத்தின்பமும் ஒன்றுசேர சமூக அங்கீ காரத்தைப் பெறும் நாளக இது கருதப்படுகின்றது. **“காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்”** என்னும் ஔவைப்பாட்டியின் மூதுரைக்கு அமைய அன்பினால் விளையும் ஆதரவைப் பெருக்கி காதல் தனிச்சுவை பருகவும், மக்கள் செல்வம் பெருக்கி மழலை இன்பத்தில் திழைக்கவும் மனம் விளைந்து இணையும் அல்லது இணைய வைக்கும் நிகழ்வு இடம்பெறுவதனையே ‘திருமணநாள்’ என்னும் பதத்தால் அழைக்கின்றோம். எண்ணும் பொழுதினில் உவகை இன்பத்தில் திழைக்கின்ற திருமண இன்பத்தைத் தருகின்ற நெஞ்சத்து இனம் புரியாத இன்பக் கனவுகளை நிறைவாக்க, துணையினைப் பெற்று மகிழ்ந்திடும் நன்னாளே ‘திருமணநாள்’. வாழ்க்கைத் துணையின் கரம் பற்றும் இங்கிதமான இன்பப் பொழுதைத் தருகின்ற மணவினை மேடையில் மங்களகரமான இசை ஒலிகள், மந்திரம் செபிக்க, மேளவாத்தியங்கள் இசைக்க, பெரியோர்கள் வாழ்த்த, இடம்பெறும் வைதிகத் திருமணத்தின் இயல்புகள் கேலிக்கு இடமாக அன்றி அவை கருத்தாழமும், சிறப்பும், உண்மைத் தன்மையும் கொண்டவையாக அமைதல் வேண்டும்.

திருமண முறைகள் குறித்துப் பலவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன. திருமணத்தை ஆயிரங் காலத்துப் பயிர் என்று எம்முன்னோர் கூறிவைத்ததன் பொருளுக்கேற்ப வாழ்நாள்முழுவதும் இணைந்து கணவன் மனைவியாக வாழ முற்படுவோர் மனம் ஒத்து இணையும் பொன்நாள். அப்பொன்நாளில் இடம் பெறும் மணவினை முறைகளை நன்கு அறிந்து அவற்றின் கருத்துக்களை உள்வாங்கி வாழ்க்கை முழுமையும் பின்பற்றவேண்டிய விடயங்களை நினைவில் இருத்திக் கொள்ளவேண்டிய கடப்பாடு மணமக்களுக்கு முன்னே உள்ளது. மணமக்களுக்கு மணவினைக்கு முன்னரும் பின்னரும் நடைபெறும் சடங்குகள், சம்பிரதாயங்கள், மரபுகள் என்பனபற்றிய விளக்கத் தெளிவு அவசியமாகும். மாற்றுச் சமய சடங்குகளில் இந்த அம்சங்கள் வலியுறுத்தப்படுகின்ற போதிலும் எமது சமயசடங்குகளில் இவை ஏனோ தானோ என்று நிறைவேற்றப்பட்டு வருவது மனவருத்தத்திற்கு உரியதே. எடுத்துக்காட்டாக கத்தோலிக்க முறைப்படி திருமணம் இடம்பெறுவதற்கு முன்னரே மணமகனும் மணமகளும் மதகுருவானவரால் திருமண பந்தம் பற்றிய அறிவுறுத்தல்களும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. ஆனால் எமது திருமண முறைகளில் இத்தகைய அம்சங்கள் துளிகூட இடம்பெறாத நிலையினை நாம் அறிவோம். திருமணத்தின் போது இப்படிச்செய் அப்படிச்செய் என சொல்லி எந்தவித புரிந்துணர்வும் அற்ற தாக செய்விக்கின்ற ஒரு நிலையினை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் இதுவரை மத நிறுவனங்களோ அன்றி மதகுருமாரோ இவற்றைப்பற்றி எந்தவித கவனமும் செலுத்தியதாக இல்லை. எமது பண்பாட்டு விழுமியங்களாகவோ அன்றி இடையில் வந்து புகுந்துகொண்ட அம்சங்களாகவோ உள்ளனவற்றை நாம் பின்பற்றுகின்றோம் என்று கூறினாலும் அவற்றில் காணப்படும் கருத்துக்கள் அல்லது உண்மைத் தன்மைகளை நாம் அறிந்து ஒழுக வேண்டாமா என்னும் கேள்வி எழுவது இயல்பே. திருமணத்திற்குத் தயாராகும் மணமகன் அல்லது மணமகள் தங்கள் திருமணத்திற்கான நிறைவேற்று முறைகளை அறிந்திருப்பது அவசியமே. வைதிகத் திருமண முறையிலே அருந்ததி காட்டுதல் அம்மி மிரித்தல் இரண்டும் முக்கிய அம்சமாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. எதற்காக அவை இடம் பெறுகின்றன என்பனவற்றிற்காக விளக்கம் அவர்களுக்கு அளிக்கப் படுவதில்லை. இன்று திருமணம் என்றால் படம்பிடிப்பதும், அலங்காரம் செய்வதும் தான் முன்னணியில் நிற்கின்றனவே ஒழிய சடங்குகள் புறம் தள்ளப்படுகின்றன. இப்படியெல்லாம் நடந்தது அப்படியான மணவறை கட்டினோம், இப்படியான கூறைச்சேலை கட்டினோம் என்று பெருமையடிப்ப தாகவே எமது திருமணங்கள் இடம்பெறுகின்றன.

திருமணச்சடங்குகள் வீண் சம்பிரதாயங்களாக நடைபெறுகின்ற நிலையை எப்போது நாம் மாற்றிக்கொள்ளப் போகின்றோம் என்பது கேள்விக்குறியே! எமது திருமணத்தில் பின்பற்றப்படும் கிரியைகள் சடங்குள் சம்பிரதாயங்களின் உள்ளார்ந்த கருத்துக்களை நாம் விளங்கி அவற்றை நல்ல முறையில் அதன் வண்ணம் ஒழுகத் தலைப்பட வைப்பதே இந்நூலை எழுதத் துணிந்ததன் நோக்கமாகும். திருமணம் இடம் கொள இணைந்துவிட்டு, துணைவியும் துணைவனும் ஒருவருக்கொருவர் பற்றுக்கோடாக வாழ்தலே வாழ்க்கை. ஒருவரை ஒருவர் பிரிந்து வாழுவதனால் இல்லறம் எமக்குக் காட்டி நிற்கும் பயனை அடையமுடியாது. தாம் கொண்ட நோக்கம் ஈடேற துணைநலம் இன்றியமையாதுது. அதனை ஔவையாரும் நற்சிந்தனையில் கொள்ள வேண்டும் என்னும் நோக்கோடு துணையின் வலிமையின் மேன்மையைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.

பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்
விண்டுஉமி போனால் முளையாதாம்-கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

அரிசியில் இருந்து உமி நீங்கிவிட்டால் அந்தஅரிசி முளைக்கமாட்டாது. உமியோடு ஒட்டி இருக்கும் காலத்தில்தான் அதனால் முளைக்க முடியும். நெல் எனும் தன்மையை இழந்து அரிசியாகி விட்டால் அதன் இயல்புத்தன்மை கெட்டுவிடும். இது போன்றே துணைநலம் என்பதும் ஒன்றோடு ஒன்று இணைந்து இருப்ப தனாலேயே பயன் தருவதாக அமையும். இரண்டும் ஒன்றை ஒன்று நீங்கினால் உமி நீங்கிய அரிசிபோன்று அதன் முளைதிறன் அற்றுப் போவது போன்றதே மனைவாழ்க்கையும், கணவனும் மனைவியும் இணைந் திருப்பதே வாழ்விற்குச் சிறப்புத்தரும். ஒருவரை ஒருவர் விட்டுப்ட பிரிவதனால் இல்வாழ்வில் இழிந்த நிலை தான் தோன்றும். கணவன் மனைவி இயைந்திருப்பதே வாழ்வின் இயல்பு. அவ்வித வாழ்வே விழுப்பம் தரும் என்பதனை கணவன், மனைவி இருவரும் உணர்ந்து வாழ முற்படுதலே சிறப்புத்தரும். வாழ்வின் இலட்சியத்தை அடைந்து உயர்வையடைய இணைந்து இன்பத்தோடு செயற்படுதலே சிறப்பாகும்.

வேடனிடம் ஆண்புறாச் சிக்கிக்கொண்டதைக் கண்ட பெண்புறா தானும் தீயில் குதித்து மாண்ட கதையை நாம் கற்றிருக்கின்றோம். இணைபிரிந்து வாழாத்துயரில் உயிர் நீத்தமேன்மை இல்வாழ்வின் சிறப்பைப் காட்ட அன்பின் உறைவிடத்தைக்காட்ட பறவைமூலம் சித்தரிக்கப்பட்ட கதையானாலும் அந்தக் கதையின் கருவில் சதிபதியாகிவிட்டால் அவர்களிடம் ஏற்படும் பாசம், நேசம் எத்தககையது என்பதனை அந்தக் கதை காட்டி நிற்கின்றது. ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ துன்பம் நேர்ந்தால் எவராலும் தாங்கி வாழுதல் துன்பம் தருவது என்பதனை மறுக்கத்தான் முடியுமா? இதில் ஆணுக்கு ஒரு விதி பெண்ணுக்கு ஒருவிதி என்று எமது பண்பாடு பாகுபாடு காட்டி நிற்கவில்லை. ஈர் உடலும் ஓர் உயிருமாய் வாழத்தலைப்பட விழைந்தோரை வாழ்த்துதல் அவர்களின் வாழ்வைப் பற்றுக்கோடு உடையாதாக, பயனுள்ளதாக, சமூகம் அங்கீகரிப்பதாக அமைத்துக் கொள்ளத்தக்கதாக வேண்டி வாழ்ததுதல், வாழ்த்தத் தலைப்படுவோரின் பாரிய பொறுப்பும் கடமையுமாகும்.

திருமணம் செய்துகொள்ளவுள்ளவர்களும், திருமணம் செய்து கொண்டோரும் மணவினை முறைகள் பற்றிய கருத்துக்களையும் அதன் பொருளையும் அறிந்திருத்தல் பயனளிப்பதாக அமையும். ஏனோ தானோ என்னும் மனப்பான்மையுடன் திருமணங்கள் இடம் பெறுவதனால் பல திருமணங்கள் முறிவடைந்து போகும் நிலை ஏற்படுகின்றமை நாம் காண்கின்றோம். எனவே திருமணம் நடக்கும் வேகத்தைவிட அது முறிவடையும் வேகம் அதிகரித்து வருவதனைக் காணமுடிகின்றது.

திருமணங்கள் முறிவடைவது அதிகரித்து வருவதற்கான காரணிகள் என்ன என்பதனை நாம் அறிந்திருப்பது அவசியம். ஏதோ சிறு சிறு காரணங்களுக்காக திருமணமுறிவினை மேற்கொள்ளுதல் தமக்கும், தமது பிள்ளைகளுக்கும் ஏன் சமுதாயத்திற்குமே தீங்கை ஏற்படுத்துவதாக அமைகின்றது என்பதனை பல ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. பிள்ளைகளின் எதிர்காலம் வளமாக, செம்மையானதாக அமைவதற்குத் தாய், தந்தையரின் ஒற்றுமை, அரவணைப்பு, ஆதரவு, கட்டுப்பாடு, வழிநடத்தல் அன்பு என்பன முக்கியமானவை. முணவினை முறிவடைந்தால் இவற்றைப் பிள்ளைகள் பெற்றுக்கொள்ள முடியாது. உறவினர்களுடன் கூட இணைந்து வாழமுடியாத நிலை ஏற்படலாம். திருமண ஒப்பந்தம் ஏன் முக்கிய மானது. ஆதனை வாழ்க்கை முழுமையும் ஏன் நாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். ஆண், பெண் உறவு என்பது பாலுறவுக்கு அப்பால் குடும்ப நன்மை, குடும்ப வளர்ச்சி, எதிர்கால சந்ததியினரின் நல்லியல்புகள் என்பனவற்றோடு பின்னிப்பிணைந்தது. எனவே திருமணங்கள் முறிவடைவதற்கான காரணகள் எவை? ஆவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழிகள் எவை என்பன பற்றி ஆய்ந்தறிதல் அனைவருக்கும் தேவையான ஒன்று.

*...Our heartiest congratulations on your success and best wishes to Neervely Welfare Association - Canada...*



# FINE PRINT & GIFT

2857 Lawrence Ave. East Suite # 2
Scarborough ON M1P 2S8

FOR ALL YOUR PRINTING NEEDS

**416 264 1557**

finecopyprinting@gmail.com

# PIC INSURANCE INVESTMENTS

Tel: 416.566.3673

**Puva Saba**
**Financial Advisor**

2387 Eglinton Ave. E. Suite 2
Toronto, ON
M1K 2M5

*fax:* 416.335.4662
*email:* info@picpuva.com
*website:* www.picpuva.com




**BUY - SELL - WHOLESALE - LEASING**

# CHANDRAN
**(Ganesh Murugesu)**

# 905-472-7464

**தமிழர்கள் மத்தியில் பெருமையை பெற்ற நிறுவனம்**




## MG Motors
**347 Main Street, Markham, ON. L3P 1Z2**
**Tel: 416-616-4054 fax: 905-472-9897**
**Email: info@mgmotors.ca Web: mgmotors.ca**

# UNITY BRINGS SUCCESS

The Annual Dinner & Cultural Event of the Neervely Welfare Association - Canada 2009, reminds me of similar events and happy days in Neervely. I am pleased to extend greetings to everyone in attendance at this function.

Our association highly respects the value of education & inspire children here and back home in their education, annually by awarding talented and deserving students. A remarkable aspect of our association is that there is always a healthy decision by all concerned, in favor of assisting towards the progress of the schools in Neervely, which is its primary objective. Association website www.neervely.ca designed to serve not only for our members but also for other community members here and abroad.

Progress of an association is in the hands of its members unity. Unity by way of positive attitude and sense of love can bring desired result. Therefore, love all.

We should all be proud of what we have accomplished to date and it is important to maintain the same unity to achieve the same in the future too.

My loving appreciation to all & let us celebrate strength in unity and togetherness in the New Year that brings good health, much happiness and prosperity.

P.Pathmanathan
Member of NWAC

## Know the Difference between a Cold and H1N1 Flu Symptoms :

| Symptom | Cold | H1N1 Flu |
|---|---|---|
| **Fever** | Fever is rare with a cold. | **Fever is usually present with the flu in up to 80% of all flu cases. A temperature of 100°F or higher for 3 to 4 days is associated with the H1N1 flu.** |
| **Coughing** | A hacking, productive (mucus-producing) cough is often present with a cold. | **A non-productive (non-mucus producing) cough is usually present with the H1N1 flu (sometimes referred to as dry cough).** |
| **Aches** | Slight body aches and pains can be part of a cold. | **Severe aches and pains are common with the H1N1 flu.** |
| **Stuffy Nose** | Stuffy nose is commonly present with a cold and typically resolves spontaneously within a week. | **Stuffy nose is not commonly present with the H1N1 flu.** |
| **Chills** | Chills are uncommon with a cold. | **60% of people who have the H1N1 flu experience chills .** |
| **Tiredness** | Tiredness is fairly mild with a cold. | **Tiredness is moderate to severe with the H1N1 flu.** |
| **Sneezing** | Sneezing is commonly present with a cold. | **Sneezing is not common with the H1N1 flu.** |
| **Sudden Symptoms** | Cold symptoms tend to develop over a few days.. | **The H1N1 flu has a rapid onset within 3-6 hours. The flu hits hard and includes sudden symptoms like high fever, aches and pains.** |
| **Headache** | A headache is fairly uncommon with a cold. | **A headache is very common with the H1N1 flu, present in 80% of flu cases.** |
| **Sore Throat** | Sore throat is commonly present with a cold. | **Sore throat is not commonly present with the H1N1 flu.** |
| **Chest Discomfort** | Chest discomfort is mild to moderate with a cold. | **Chest discomfort is often severe with the H1N1 flu.** |

**The only way to stop the spread of the epidemic is to spread the awareness.**


Uthayan
Professional Photographer
People Photography
416-291-7009 | 416-818-5493
We Do: Weddings, Children Portraits & All Other Occasions


அருள்மிகு
ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம்
www.arasakesaripillayar.com
நீர்வேலி


நீர்வேலி நலன்புரி சங்கம்
Neervely Welfare Association
WWW.NEERVELY.CA




# invis

**Low Mortgage Rates Are Just The Beginning!**

getting a great mortgage is something to celebrate

## FOR YOUR UNIQUE MORTGAGE NEEDS

*** 1st & 2nd Mortgages**
*** Refinance and switch**
*** Equity line of credit**
*** Commercial Mortgages**
*** Registered Education Saving Plan (RESP)**
*** New home purchases**


TD Canada Trust

Scotiabank

MAPLE TRUST

***Rajmogan Selliah***
*Mortgage Consultant*
*Dir: 416.569.3200*
*Fax: 416.273.7606*
*2929 Lawrence Ave. East, Suite 203,*
*Scarborough, ON M1P 2S8*
*Email: moganselliah@gmail.com*





Tele Raj Videos
2006 அதிசயராகம்
புகழ் TeleRaj Video
பலவருட
அனுபவமுள்ள
படப்பிடிப்பாளரை
நாடுங்கள்
Wedding
Birtdays
Puberty Ceremony
Stage Programs
All other
Convert
DVD NTSC PAL
K.RAJ
TEL: 905-470-5801 / 647-272-7242
Steeles & Brimley , Markham

# உங்கள் வீட்டின் விலையைத் தக்க வைக்க....

**எஸ்.கே. பாலேஸ்**

## மறுநிதி ஏற்பாடு செய்தல் Refinancing

வட்டிவீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டால், சில வீட்டுச் சொந்தக்காரர்கள் தமது வீட்டை விற்கத் தூண்டப்படுவர். நல்ல வட்டி வீதம் வீட்டுச் சந்தையைச் சூடாக்கி அதனால் விற்பனைச் சந்தையை நல்ல சூழலில் வைத்திருக்கும்.

வீட்டை விற்பதற்கு வட்டி வீதம் தான் ஒரே காரணம் என்றால், தற்போதைய உங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யுமானால் நீங்கள் உங்கள் வீட்டிற்கு Refinncing மறு நிதி பெற யோசிக்கலாம். இதனால் சொல்வது என்னவென்றால் உங்கள் வீட்டைக் குறைந்த வட்டி வீதத்தில் ஈடுவைப்பதே (புதிய ஈடு). இதனால் நீங்கள் mortgage கட்டும் மாதாந்த ஈட்டுத்தொகை குறைவடையும். ஒரு சிலர் ஈட்டுத்தொகையின் அளவை அதிகரிக்கச் செய்து தமது பிற செலவுகளை அதற்குள் அடக்குகிறார்கள்.

ஆனால் நீங்கள் ஒன்றை மனதில் வைத்திருத்தல் வேண்டும். அதாவது மூடிய ஈட்டுத்தொகை (closed mortgage) விடயத்தில் நீங்கள் கணிசமான தொகை அபராதம் செலுத்த வேண்டி ஏற்படலாம். நீங்கள் மறுநிதி செய்த தொகை அதிகமானால் நீங்கள் மிகப்பெரிய கட்டுத் தொகையைக் கட்ட வேண்டி ஏற்படலாம். எனவே பணம் கடன் கொடுக்க வேண்டிவரின், பேசி இந்த ஏற்பாடு உங்களுக்கு பொருளாதாரரீதியில் நியாயமானதென அறிந்து செயல்படுங்கள்.

## புதுப்பித்தல் Renovation

இந்த மாற்று நடவடிக்கை வீடு விற்பவர்களில் கருத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இப்பொழுது உள்ள வீடுகளைத் திருத்தி விற்றுவிட்டுப் புதிய அல்லது தமக்கு உகந்த வீடுகளுக்கு மாறிச் செல்கின்றார்கள். புதுப்பித்தல் என்பது வழக்கமாக இருக்கும் இடத்தைப் புதுப்பித்தல் அல்லது இருக்கும் வீட்டின் அளவை அதிகரித்தல் அல்லது இரண்டுமே இருக்கலாம்.

எனினும் புதுப்பித்தல் இதயப் பலவீனமானவர்களுக்கு உகந்ததல்ல. இது அநேகமாக ஒரு அதிக செலவான விடயமாகும். ஒரேயடியாக உயர்ந்து உங்கள் கணிப்பு, திட்டம் எல்லாவற்றையும் தாண்டிச் செல்லக்கூடியது. மேலும் உங்கள் திட்டத்தைப் பொறுத்து நீங்கள் பல நாட்கள் அல்லது வாரங்கள் ஒரே தூசி, சத்தம் நிறைந்த ஒரு சூழலில் வாழ வேண்டியிருக்கும். பிரத்தியேகமான இடமின்மை, வசதியீனம் போன்றவையும் மகிழ்ச்சியான விடயம் அல்ல.

நீங்களே இதைச் செய்வதாயின் ஒரு நிபுணர் செய்தது போன்று தோற்றமளிக்கக் கூடியவாறு உங்களால் செய்ய முடியுமென்ற நம்பிக்கையிருந்தால் செய்யுங்கள். திறமையற்ற ஒருவர் செய்ய புதுப்பித்தல் அல்லது மேலதிக வசதிகள் வீட்டின் பெறுமதியை உண்மையில் குறைக்கவே செய்யும். நீங்கள் அந்த வீட்டில் நீண்ட நாட்கள் வசிக்கும் எண்ணம் இல்லாவிடின் நீங்கள் செய்ய எண்ணியுள்ள திருத்த வேலைச் செலவு குறைவாகவும், பிரயோசனம் அதிகமாகவும் இருக்க வேண்டும். “வீடு திருத்தச் செலவு செய்த பணத்தின் பெரும்பகுதியை அல்லது முழுவதையும் வீடு விற்கும் போது எம்மால் பெற முடியுமா?“ என்று நீங்களே உங்களைக் கேட்க வேண்டும்.

தொழில் நிபுணத்துவத்தில் செய்யப்பட்ட திருத்த வேலை உங்கள் சமயலறை, குளியலறை ஆகியவற்றை மதிப்பில் அதிகரிக்கச் செய்வதால் நீங்கள் செலவு செய்த பணத்திற்கு மேல் நீங்கள் பெறலாம்.

ஆனால் $40,000 செலவில் ஒரு உட்புற நீச்சல் தடாகம் கட்டினால் அத்தொகையை உங்களால் பெறமுடியுமோ தெரியவில்லை. சிலவேளைகளில் இப்படியான திருத்த வேலைகள் உங்கள் வீட்டின் செலவைச் சிறிதாகவும் காண்பிக்கலாம்.

புதுப்பித்தல் யோசனையை மிக்க கவனமாக, நன்றாகக் கூர்ந்து அணுகுங்கள். உங்கள் தேவையை நன்கு அறிந்துவிட்டு முகவர் அல்லது வீட்டு விலை மதிப்பளாரோ இருந்தால் உங்கள் வீடு திருத்திய செலவு வீட்டை விற்கும் போது திரும்ப வருமா என கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

## உங்கள் வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்குக் கொடுத்தல்

நிதி நிலை இறங்கும் முகமாக இருக்கும் வீட்டில் ஒரு அறையையோ, அல்லது வீட்டின் அடித் தளத்தையோ வாடகைக்குக் கொடுக்க யோசிக்கலாம். வீட்டை விற்பதற்கு பதிலாக ஒரு மாற்று ஏற்பாடாக இதைச் செய்யலாம். இது ஒரு கவர்ச்சியான தீர்வாக இருந்தாலும் இதில் இறங்கும்போது மிக விழிப்பாக இருக்க வேண்டும். பின்வரும் சில விடயங்களை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதலில் வாடகைக்கு விடப்படும் பகுதிகளைப் பற்றியும் அவற்றிற்குரிய வாடகை மற்றும் தீ விபத்து பற்றிய உப சட்டங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் குடியிருப்பாளரின் (வாடகைக்கு) பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சட்டங்கள் ஒன்றாரியோவில் உள்ளன. அவற்றையும் நாம் தெரிந்து கொள்வது நல்லது.

தேவையற்றவர்களை குடிவைப்பதால் உங்களுக்கு தேவையற்ற பிரச்சினைகளும் அதனால் வீண் அலைச்சலும் உங்கள் நேரமும் வீணாகும். அவர்களிடமிருந்து வாடகைப் பணம் பெற நீங்கள் பெரிய அளவில் சட்ட நடவடிக்கையும் பணச் செலவும் செய்ய நேரிடலாம்.

முன்பின் தெரியாதவர்களுக்கு வீட்டை வாடகைக்கு கொடுப்பதனால் ஏற்படும் விளைவுகளை நினைத்துப் பாருங்கள். முக்கியமாக உங்கள் பிரத்தியேக வாழ்வு பாதிக்கப்படும். நீங்கள் வாடகைக்கு கட்ட வேண்டிய வரியையும் வீடு விற்பதற்கு கட்ட வேண்டிய வரியையும் உங்கள் கணக்காளரிடம் தெரிந்து கொள்ளுங்கள்.

வீட்டை வாடகைக்கு கொடுக்க முடிவு செய்தால் உங்கள் வீட்டு விற்பனை முகவரை அணுகினால் அவர் வாடகைக் குடியிருப்பாளரை பேட்டி கண்டு வீட்டை வாடகைக்குக் கொடுக்கலாமா என்பதை முடிவு செய்வார். ஒரு ஒப்பந்தத்தை நீங்கள் அவருடன் கைச்சாத்திட்டுப் பெற்றுக் கொள்ளலாம். அது உங்களையும் வாடகைக் குடியிருப்பாளரையும் சட்டப்பிரச்சினையில்லாது வாழ வழிவகுக்கும்.

## உங்கள் வீட்டை நீங்கள் எப்போது விற்க வேண்டும்?

இதற்கு உங்களுடைய பதில் உடனடியாக என்று இருக்கலாம். நீங்கள் வேறொரு நகரத்தில் வீட்டை விற்பதற்கு விலை பேசியிருந்தாலோ அல்லது இன்னொரு வீட்டை வாங்க முடிவு பண்ணியிருந்தாலோ உங்கள் வீட்டை விரைவில் விற்பது தான் உங்கள் இலட்சியமாக இருக்கும். அநேக மக்களிற்கு எப்போது வீட்டை விற்பது என்பதில் அவசரப்படவேண்டிய தேவை இராது. விற்பதற்கு என்ன காரணங்கள் என்பதை இப்போது பரிசீலிக்கச் செய்வோம்.

## எவ்வளவு விரைவாக விற்க வேண்டும்?

வீட்டை விற்பதாக முடிவு பண்ணியவுடன் அதற்குரிய வேலைகளை முடித்துவிட வேண்டும். ஆனால், "விற்பனைச் சந்தையில் உங்களுடைய வீட்டை அதிகபட்ச விலைக்கு விற்க நீங்கள் விரும்பலாம். வீடு வாங்குவதற்குப் பலர் போட்டி போடலாம். (Seller's Market) எனவே வேகமும், விலையும் ஒன்றுக்கொன்று இணைந்து செல்ல வேண்டும்.

எனினும் ஒரு வீடு வாங்குவோர் சந்தையில் பல வீடுகள் விற்பனைக்கு வருவதால், (Buyer's Market) அங்கும் வேகமும் விலையும் விற்பனையை உறுதி செய்கின்றன. உங்களுடைய தேவை என்ன என்பதை உங்களுடைய வீட்டு முகவருடன் விவாதிக்கலாம். அவர் உங்களிற்கு நீங்கள் விரும்பிய விலையிலும், விரும்பிய கால எல்லைக்குள்ளும் அதைப் பெற்றுத்தர உதவுவார்.

உங்களுடைய பெற்றோருடைய வீட்டை நீங்கள் வாரிசு என்ற முறையில் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். அது உங்களிற்கு தேவைப்படாத பட்சத்தில் அதை நீங்கள் விற்கவும் தீர்மானிக்கலாம். இந்த விடத்தில் உங்களுடைய வழக்கறிஞரையும், கணக்காளரையும் வீடு விற்பனை சம்பந்தமான வரிகள் (Capital Gains Tax) பற்றியும் விசாரித்து அறிந்து கொள்ளுங்கள். சிலவேளை நீங்கள் பெற்றோருடைய வீட்டை வைத்துக் கொண்டு, உங்கள் சொந்த வீட்டை விற்கவும் தீர்மானிக்கலாம்.

வீட்டு விலை அதிகரிக்கும் போது, வீட்டை விற்று இலாபம் பெறவும் நீங்கள் தீர்மானிக்கலாம். வீட்டுக்கடன் வட்டிவீதம் (Mortgage Interest Rate) உங்களுடைய விற்கும் தீர்மானத்திற்கு சாதகமாக இருக்கலாம். அடமானக்கடன் வட்டி வீதம் குறையும்போதும் விற்பனைச் சந்தை சூடு பிடிக்கின்றது. இந்தச் சந்தையைப் பற்றி "எப்போது நீங்கள் வீட்டை விற்க வேண்டும்" என்ற தலைப்பின் கீழ் மேலும் விபரங்களைப் பெறலாம்.

உங்களுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டால் அதிலிருந்து விடுபட வீட்டை விற்கத் தீர்மானிக்கலாம். உங்களுடைய அடமானக்கடன் வழங்கியவரிடம் நீங்கள் உங்கள் நிதி நெருக்கடியைப் பற்றியும், அதற்காக வீட்டைத் தீர்மானித்திருப்பதையும் மறைக்காமல் கூறலாம். நீங்கள் வீட்டை விற்றதின் பிறகு, அடமானக்கடனிற்கு கட்ட வேண்டிய பணத்தையும் பிந்திய தவணைப் பணத்தையும் அவர்கள் பெற்றுக் கொள்ளச் சம்மதிக்கக்கூடும்.

## விற்பனைச் சந்தையின் சுழற்சிகள்

உங்களுடைய வாழ்வில் நீங்கள் செய்யும் மிகச் சிறந்த முதலீடு உங்கள் வீட்டின் மீதுதான். ஏனெனில் அது உங்களிற்கு வசிப்பதற்கு ஒரு தேவையான இடத்தையும், உங்கள் மகிழ்ச்சியில் நிகழ்வுகளைத் தேக்கி வைக்கும் ஒரு இடமாகவும் அமையப் போகின்றது. ஆனால் சந்தையில் பல சுழற்சிகள் எப்போது உங்கள் வீட்டை விற்பது என்று தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது. இந்த சுழற்சிகள் வீடுகளிற்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தலாம். (இதனால் வீடுகளின் விலை உயரலாம்). அல்லது மேலதிக வீடுகளை சந்தைக்குக் கொண்டு வரலாம். இதனால் வீட்டின் விலைகள் உயர்வது தடுக்கப்படுவதுடன் விலைகள் வீழ்ச்சியும் ஏற்படலாம்.

இந்த சுழற்சிகளை எது இயக்குகின்றது? நாட்டின் பொருளாதாரம் என்பது தான் உண்மையான பதில். பொருளாதாரம் வளர்ச்சியடையும் போது தொழில் வாய்ப்புக்கள் பலம் பெற்று மக்களுக்கு தங்கள் எதிர்காலத்தில் ஒரு நம்பிக்கை ஏற்படும்போது வீடுகளின் கிராக்கி (Demand) அதிகரிக்கின்றது. மாறாக, பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போது வேலை இழப்பு அதிகரித்து அநேக வீடுகள் விற்பனைக்கு வருகின்றன. அதேநேரம் வீடு வாங்க விரும்புவோர் நிலைமை சீர்பெறும் வரை காத்திருக்கின்றார்கள். இந்தப் பொருளாதார ஏற்ற இறக்கம், தேசிய மட்டத்திலோ அல்லது குறிப்பிட்ட பிரதேசங்களிலோ பாதிப்பை ஏற்படுத்தலாம்.

**S.K.Bales,** CRA, CAR, MVA, FRI, CRES
**Real Estate Broker**
**Cell: 416-801-3219**



**CRA, (Canadian Residential Appraiser)**
Designation with the Appraisal Institute of Canada

**CAR: (Certified Appraisal Reviewer)**
Designation with Canadian National Association of Real Estate Appraisers

**MVA (Market Value Appraiser-Residential)**
Designation with The Canadian Real Estate Association

**FRI (Fellow of the Real Estate Institute)**
Designation with Real Estate Institute of Canada

**CRES (Certified Real Estate Specialist)**
Designation with Real Estate Institute of Canada

**REAL ESTATE BROKER:**
Real Estate broker licence with Real Estate Council of Ontario.

# TJ CHAIR RENTAL



**The TJ Chair Rental can supply Tables & Chairs to meet every level of need or elegance.**

## PARTY RENTALS



**உங்கள் சகல வைபவங்களுக்கு தேவையான கதிரை, மேசைகளை வாடகைக்கு பெற்றுக் கொள்ள**

Call: Thievendran

*Tel: 905-201-2958 Cell: 416-219-9476*

# ENERGY CARPET CLEANING

## THE PROFESSIONAL

## CARPET CLEANING

Safe • Clean • Earth Friendly

- Carpet Cleaning
- Oriental Rugs
- Carpet Repair
- Leather Cleaning and Conditioning
- Upholstery & Fine Fabric Cleaning
- Pressure Washing
- Tile & Grout Cleaning
- Tile Repairs
- Pavers & Saltillos
- Stripping & Sealing

**உங்கள் சகல தேவைகளையும் நிறைவு செய்ய**





## Kugan

**Tel: 416-525-4288**
**Bus: 905-201-2804**

**39 Guinevere Road, Markham Road, Ontario L3S 4V3**


கோகுலம்
Gogulam
Instuments
* பொங்கஸ்
* ஆர்மோனியம்
* கஞ்சிரா,
* கடம்
* தவில்
* வயலின்
* வீணை,
* சுருதி Box
* மிருதங்கம
* புல்லாங்குழல்
சுடிதார்
வேட்டி
சாறிகள்
சிறுவர்களுக்கான
பாவாடை, சட்டை
Tops
பொட்டு
காப்பு
காப்பு Stand
கைகளை
அலங்கரிக்கும்
வாண Sticker
பரத நாட்டியத்திற்குரிய 1st Quality அரக்கு set
2nd Quality அரக்கு Set, Fancy Jewellery
கலாஷேத்திர சாறிகள், தர்மாபுரம் Costume
Art Silk, காற்சலங்கை, குஞ்சம், Bun, நாக்கொடிமாலை
அழகிய பூமாலை, சரம் ஆகிய அனைத்தும் கழிவு விலைகளில்
அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய Gift Item
திருமண, பூப்புனித நீராட்டு விழா, அரங்கேற்றம்
ஆகிய கொண்டாட்டங்களுக்குக் கொடுக்கக்கூடிய அழகிய
பரிசுப்பொருட்கள் அனைத்தும் மொத்த, சில்லறை விலையிலும்
பெற்றுக்கொள்ளலாம்.
பூசைக்குரிய திரவியங்கள், வாசனைப் பொருட்கள்,
சுவாமிப்படங்கள், சுவாமி மாடம் உட்பட இன்னும் பல
பெற்றுக் கொள்ளலாம்.
பலவர்ண வேலைப்பாடுகளுடன் கூடிய மேசைகள் Water Fountion
Caram Boat, Cricket Bat இன்னும் பல மலிவு விலையில்
Tel:(416) 265-2093
2654 Eglinton Ave, East, Scarborough,
ON M1K 2S3 Canada (Brimley & Eglinton)
E.Mail: info@gogulam.ca
Web: www.gogulam.ca


Kare Medical Spa & Salon
NEW CLIENT
10% OFF
Kavitha
905.266.2192
905.781.3203
Woodbridge
* Threading
* Laser Hair Removal
* Microdermabrasion
* Treatment Facials
* Chemical Peels
* Bridal Makeup & Hair (Package)
* Registered Massage Therapy
(Insurance Coverage)
136 Winges Road
Unit 16 (2nd Floor)
Woodbridge, ON
L4L 6C4


AWARDS
TROPHIES
GIFTWEAR
NAME PLATES
LASER ENGRAVING
MEDALS
BADGES
RIBBONS
PLAQUES
AND MORE.....
RK
R K TROPHY
5635 Finch Avenue, East, Unit # 7
Scarborough, Ontario. M1B 5K9
KAMLESH PATEL
Cell : 416 880 3155

# Cintac Business

## TAX, ACCOUNTING & CONSULTING

**Accounting Services**
Book keeping and payroll services
GST and PST returns
A/R and A/P maintenance
Computerization and system set-up
Preparing financial statements

**Management Consulting Services**
Incorporating business
Preparing business proposals
Re-structuring
Business evaluations
CCRA audit representation

**Financial Services**
Personal and business loan
R.R.S.P, R.E.S.P and mutual funds
Personal financial planning

**Specializing in Income Tax**
Personal tax planning and
Preparation – E-file
Corporate tax planning and preparing
Tax appeals and representation

FAST
RELIABLE
CONFIDENTIAL

**Mono Tharmarajah, CGA or Krish Tharmarajah, Dip.**
**Ram Tharmarajah, BASc. Bsc.**

**TEL: 416-438-6318**

Fax: 416-438-6837 e-mail: cintac@aol.com
1200 Markham Rd., unit 308, Scarborough, Ontario, M1H 3C3


LOOKING FOR A HOME?
★ Buying or Selling?
★ Residential, Commercial & Industrial Listings
★ Call today and I will be happy to assist!!
REALTOR
Century 21.
Rinay Chand
Real Estate Broker
Dominion Realty Inc., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Not intended to solicit buyers under contract or properties already listed for sale.
Bus: 905-792-2121
Cell: 416-822-2655


"The referral of your friends and family is the greatest compliment you can give me. Thank you for your trust."
Rinay
Cell: 416-822-2655
Not intended to solicit buyers under contract or properties already listed for sale.


Are you WORRIED about your DEBTS?
We Provide Legitimate Credit Services
கடன் தொல்லையா?
Call for FREE Consultantion
Tel: 416-264-1010
CR Canada
Credit Reform Canada
Judgement in your favour!
We Can STOP Collection Agencies Calls and Threats
In case of Final State, We can take care of
* Consumer Proposals / * Negotiate Debt
* Re-Payment Option Plans / * Bankruptcy
* Restoration / Recovery of Credit
Back on Proven Track
One Solution for all your DEBTS no matter what the Situation... We Can Help...!
உங்கள் வீடு வாகனம் மற்றும் சொத்துக்களை
இழக்காது அனைத்து விதமான கடன்
தொல்லைகளிலுமிருந்து தீர்வு காண இலவச
ஆலோசனைகளுக்கு உடனடியாக அழையுங்கள்
885 Progress Ave, Unit 202, Scarborough, ON. M1H 3G3
நீர்வேலி நலன்புரிச்சங்கம் கனடா முன்னெடுக்கும் முயற்சிகள்
அனைத்துக்கும் CR Canada வின் நல்வாழ்த்துக்கள்.

# Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Est. 1991

www.computek.edu




## FREE TRAINING !

You may qualify, If you are unemployed / currently receiving Employment Insurance(EI)
or
Employment Insurance (EI) finished within the last 3 years
or
Maternity leave finished within the last 5 years,
***Please contact us for details***

**Financial Assistance**

If you are
a new immigrant to Canada
or
Receiving welfare assistance
or
Underpaid or employed part time, or temporarily,

You may be eligible for Financial Assistance.

## Courses Offered

**Diploma Courses**

**Personal Support Worker ( PSW )**
**Early Childcare Assistant (ECA)**
**Computerized Accounting**
**Business Administration**
**Network Engineering**
**Medical Office Admin ( MOA )**

**Certificate Courses**

Ms Vista
Word, Excel
Access, Outlook
Powerpoint

Financial Accounting
Quickbooks
Simply Accounting
AccPac

## Markham Campus

Markham / Steeles
(On Steeles,1 Block East of Markham Rd)

**905-471-3344**

## Scarborough Campus

Kennedy / Sheppard
(North-East Corner)

**416-321-9911**

## Toronto Campus

Kennedy / Eglinton
(N/W Corner, Above Library)

**416-285-9941**

Not all the courses are available at all the locations

# Increase your income. Change your life.

If you are motivated and have the following qualifications, you could increase your income and secure your future by selling the Global Educational Trust Plan, one of Canada's fastest growing education savings plans. Global offers sales and product training and support in all key business areas.

Canadian families are recognizing the need to invest in their children's education.

**This opportunity requires:** • Good communication skills • Some sales/business experience • Openness to learning • Second language an asset.

**Jeeva Gopalasingam Scholarship Plan Representa**

**(416) 258-8289 or (416) 741-7377**

**jeevag@globalassociates.ca**

GLOBAL

EDUCATIONAL MARKETING CORPORATION


distributor of the

GLOBAL EDUCATIONAL TRUST PLAN

**A successful career is a phone call away.**

# நன்றிகள் பல...

*"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது."*



எமது சங்கத்தின் நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைவதற்கு

- ★ கலந்து கொண்டு சிறப்பித்த அன்பர்களுக்கும்,
- ★ விளம்பரங்கள் தந்து உதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும்,
- ★ நிகழ்ச்சிகளை வழங்கி மகிழ்வித்த கலைஞர்களுக்கும்,
- ★ பல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய அங்கத்தவர்களுக்கும்,
- ★ எமது வாழையடி வாழை மலருக்கு கட்டுரைகள், கவிதைகள் தந்து உதவிய அன்பர்களுக்கும்,
- ★ எமது விழாவினை பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஊடாக விளம்பரப்படுத்திய நிறுவனங்களுக்கும்,
- ★ இம்மலரை அழகாக பதிப்பித்து வழங்கிய Fine Print நிறுவனத்தினருக்கும்

எமது இதயம் கலந்த நன்றிகள் உரித்தாகட்டும்!

நீர்வேலி நலன்புரிச்சங்கம்
கனடா

செயற்குழு உறுப்பினர்கள்
டிசம்பர் 05, 2009


SpiceLand
VIDEO
(416) 292 9769
VHS
8MM
MINI DV
VCD
DVD
MONEY TRANSFER
all kind of transfers CD, DVD duplication




Fine Print 416 264 1557